3. லுடன் தொடர்ந்து மீனங்கனகாசலத்து வீற்றிருப்ப வெண்கிரி சூழ்ந்த வெழுகடலேழு னெழில் வெண்குடை நிழற்ற செங்கோல் நடப்பக் கொடு
4. ங்கலி நடுங்கி நெடும்பிலத் தொளிப்ப வில்லவ செம்பியர் விராடர் பல்லவர் திறையுடன் முறைமுறை பணிய விருநேமியளவு மொரு நேமி
5. யோங்க இன்னமுதாகிய வியலிசை நாடக மன்னி வளர மணிமுடி சூடி வெற்பென வோங்கிய வீரஸிOஹாஸனத்துக் கற்பக நிழற்கீழ் கலை வல்லோர் புகழ ம
6. ன்னவர் தேவியர் வணங்கி நின்றேத்த அன்ன மென்னடை யவனி முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய ஸ்ரீகோச்சடைய வன்மரான திரிபுவனசக்கரவத்திகள்
7. ஸ்ரீ குலசேகரதெவற்கு யாண்டு பதின்மூன்றா வதினெதிரைய்யா மாண்டு கன்னி நாயற் றொன்பதாந் தியதியும் பூர்வபட்சத்த த்தமியும் வியாழக்கிழமை
8. யும் பெற்ற சதயத்து நாள் ஆரிநாட்டு ப்ரஹ்மதெயம் ஸ்ரீவராகக்ரம சதுர்வெதிமங்கலத்து ஸபையோம் கருநிலக்குடிநாட்டு தேவதான ப்ரஹ்மதெயந் திருத்தங்காற்

9. றிருமலை மேனின்றருளின பரமஸவாமிகளுக்கு ஃபீஃஷானம் பண்ணிக்குடுத்த பரிசாவது நம்மூராந வேனிலை வானவன் மஹாதேவி விண்ணக ரெம்பெருமானா வணி

10. த்திரு நாளிலே யாயிரத்தனூஞ்நூற்றுவன் திருவெடுத்துக் கட்டிலிலேயேறியருளின திருவோலக்கத்திலே திருத்தங்காலுடைய்மை செய்கிற [திரு]வெள்ளறை

11. ஸ்ரீக்ரு ஷ்ணன் ஸ்ரீக்ரு ஷ்ணனானதிருமழிசை ஃஸர் நின்ற நாராயணன் திருமுகங் கொண்டு வந்துங்களூரிலே இவெம்பெருமானுக்கு ஜன்மமாக ஒரு புலக் கு குளங்கா

12. ராண்மை தரவேணுமென்று இவர் சொன்ன மையிலிவெம் பெருமானுக்கு ஹஃபி ஃானம் பண்ணிக் குடுத்த புலக்குளக்காடாவது இவ்வூர் கீழ்பிடாகை புலக்கு

13. எத்துக்கு நான்கெல்லையாவது இக்குளத்து நீர் நக்கலுக்குக் கிழக்கு இடர் காலுக்கு வடக்குங் கீழெல்லை யடுகளூர் நீர் நக்கலுக்குங்

14. கூடலூர் காலுக்கு மேற்கும் வடவெல்லை இக்காலுக்குத் தெற்கு மின்னான் கெல்லைக்குள்ளே ஸ்ரீகிரா

15. மணிநல்லூரான நின்ற நாராயணப்பேரேரி யென்றும் திருநாமத்தால் குளமும் கல்லி

16. இதன் கீட்பூமி காடுவெட்டிக் கரட்டைப் பறித்து வரம்பிட்டு பிரம்பாடி நீருங் கடத்த காலுங்

17. கல்லித் தாங்கள் வேண்டும் பயிர் செய்துஞ்செய்வித்துங் கொள்வாராகவுமி நான் கெல்லைக்குள்ளுங் கீணோக்கின

18. கிணறு மேனோக்கின் மரங்களு மற்று மெப்பேற் பட்டனவு முட்பட பண்ணிக் குடுத்தோம் ஃஹாஸஹெயோந்

19. திருமலை மேனின்றருளின வரஃஸ்வாமிகளுக்கு இக்குளத்துக்கடமை யந்தராயம் நீக்கிக் காட்சி நாட்டோகரியும் கருமவாராட்

20. சி கற்பூர விலையு மறப்பாடி காவலு மெங்கள் வினி யோகங்களுந் தடிப்பதக்கு மற்றுள்ள சில்வரி பெருவரிகளெப்பேற்பட்ட

21. னவுங் கொள்ளப் பொமாகவுமிப்படி ஸംஃஷித்து ஶஃஃஷானம் பண்ணிக் குடுத்தோம் [ம்] ஃஹாஸஹெயோந் திருத்தங்காற்தி

22. ரு மலை மேனின்ற ருளின வரஃஸ்வாமிகளுக்கு ஃஹாஸஹெயோம் இப்படி செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொள் இவை ரஃஹ

23. ட்டன் மகன் திருமாலிருஞ்சோலை நாராயண ஹ ட்ட னெழுத்து இவை குரவசேரி ஆழ்வானெழுத்து இவை கந்தாடை நா

24. ராயண னெழுத்து இவை நெட்டூற் திருமாலிருஞ்சோலை நாராயண ஹ ட்ட ஸொஃயாஜி எழுத்த இவை நம்பிறகாட்டுக்.

25. கை த்ரை லோக்யநாராயண ஹட்ட எழுத்து இவை பசலை ஸ்ரீவக்ஷ
ஸாங்கன் பேரருளாளன் எழுத்து இவை பெருவா

26 யூற் பெரிய நம்பிய யஜ்ந மூத்தி எழுத்து இவை பெருவாயூற்
சேந்தன் மாறனெழுத்து இவை பசலை ஸ்ரீ மாதவனெழுத்து இவை

27 பசலை திருக்குன்றன் ஸ்ரீ வாஸுதெவ ஹ ட்டசோமயாஜி
எழுத்து இவை திருநல்லூர் தாமோதர னானந்த நாராயண னெழுத்து இவை

28 பெருவாயூர் ஜாத வேதனடிகளெழுத்து இவை திருவழுந் தூற் தேவரெழுத்து
இவை பசலை ஸ்ரீ ஊயவன் சேர்ந்த பிரானான அழகிய பிரா

29 ன் தாஸன் எழுத்து இவை நெரட்டூர் ஆட்கொண்ட பிள்ளை எழுத்து
இவை பசலைத் திருமாலிருஞ் சோலை அடிகள் எழுத்து இவை

30. இருங்கண்டித் திருமாலிருஞ் சோலை நாராயணன் எழுத்து இவை
கந்தாடை நாராயண நம்பிமகன் பேராயிரமுடையான் எழுத்து

31. இவை குண்டூர் திருமாலிருஞ்சோலை நாராயணன் எழுத்து இவை கிராஞ்சி
ரக்ஷ ஹட்டன் எழுத்து இவை ஒட்டிரை ஸ்ரீரங்கராயஹட்ட

32. ஸோமாயாஜி எழுத்து இவை திருப்பேற் தேர் பொலிய நின்றான் எழுத்து
இவை வீரவல்லித் திருமா லிருஞ்சோலை நாராயணன் எழுத்து

33. இவை பசலை ஸ்ரீவக்ஷவீரங்கனடிகள் எழுத்து இவை கந்தாடை
கேசவன் எழுத்து இவை திருத்தங்கால் அனவரத தான சீராமதேவன் எ

34. ழுத்து இவை நெ ரெட்டூர் ஸ்ரீகுமாரன் எழுத்து இவை பசலை க்ஷேமரயன்
சங்கர நாராயணன் எழுத்து இவை குரவசேரி பரணனார் எழுத்து

35. இவை மருதூற் சங்கரன் பெரிய நம்பி எழுத்து இவைகுரவசேரி
திருமாலிருஞ்சோலை நாராயண னெழுத்து இவை சாதணைப்
பள்ளி கொண்

36. டானெழுத்து இவை பெருவாயூரடிகள் பூதத்தாமனெ முத்து இவை
கிராஞ்சி சிங்கப்பிள்ளை எழுத்து இவை மருங்கூருதய திவாகரன்

37. சிராமதேவனெழுத்து இவை கிராஞ்சிய நாராயண ஹட்ட
அபிஷேகக்ரதுயாஜிச எழுத்து இவை பொன்ன
புறத்தாள வந்தானெழுத்து இ

38. வ பசலைச் சேந்தபிரான் சூரிய தேவ னெழுத்து இவை
குண்டூர் செண்பகநம்பி எழுத்து இவை மருதூற்
மகாதேவ ஸோமயாஜி நாராயண

39. ன் எழுத்து இவை உறுப்புட்டூர்ப் பேராயிரமுடையான்
எழுத்து இவை பிராயூற் தேவதேவேரஸ ஹட்ட ஸோமயாஜியார்
மகனழகனெழுத்து

40. இவை வங்கிப்புறத்து ஆண்டபிள்ளை எழுத்து இவை சாகணை
யஜ்ஞ மூத்திஎழுத்து இவை நாலூரிளைய பெருமானெழுத்து

41. இவை முற்பிலாச் சோலைப் பிரானெழுத்து இவை பொன்னம்புரத்து
யஜ்நமூத்தி எழுத்து இவை குரவசேரிச் சிராம தெவ

42. ஹட்ட ஸொமயாஜி எழுத்து இவை குரவசேரி சேந்த பிரானெழுத்து இவை கிராஞ்சிக் கண்ணகுமா ரனெழுத்து இவை திருத்

43. தோவாளையூர் சீராம தேவனனைஞ்ச கோனெழுத்து இவை தூப்பிற் சிதர ஹட்ட சோமயாஜி எழுத்து இவை கிராஞ்சி ஸ்ராஹூண

44. னெழுத்து இவை கோமடத்துச் சிராம தேவனெழுத்து இவை பெருவாயூர் சேந்த பிரானடிகளெழுத்து இவை பெருவாயூர

45. டிகள் சேந்த பிரானெழுத்து இவை திருப்பேர் ஸ்ரீ ஙரூன திருமாலிருஞ்சோலை நாராயணனெழுத்து இவை நம்பூற் ஸூநு ஸ்ராஹூண

46. னெழுத்து இவை முற்பிலாத் திருமாலிருஞ்சோலை நாராயணனெழுத்து இவை திருப்பேற் சேந்த பிரான் நாராயண னெழுத்து இவை

47. பசலைச் செந்தாமரைக் கண்ணன் சங்கரநாராயண னெழுத்து இவை பெருவாயூர்ச் சுதனடிகளெழுத்து இவை திருப்பேர் நாராயணன் திரு

48 மாலிருஞ்சோலை எழுத்து இவை பத்தங்கிச்சேது டையான் ஹட்டனெழுத்து இவை குண்டூர் வரூஷணமூத்தி எழுத்து இவை நாலூற்

49 பாண்டவ தூதனெழுத்து இவை பசலைக் கேசவ னெழுத்து இவை பொட்டிறை யாட்கொண்ட வில்லிஹட்ட னெழுத்து.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 225/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1070 - 1120 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 564/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | சோழர் | ஊர்க்கல்வெட்டு | |
| மன்னன் | : | குலோத்துங்கன் | எண் | : 4 |

இடம் : நின்ற நாராயணப்பெருமாள் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்

குறிப்புரை : திருத்தங்கல் திருமலைமேல் நின்று அருள்புரிகின்ற பெருமாள் கோயில் இறைவன் அம்மவாசை தோறும் எழுந்தருளப்பட்டு புறப்பாடு செய்யப்பட்டுள்ளார். இந்தப் புறப்பாட்டிற்கான செலவினங்களுக்காக வேண்டி ஒன்றரையே ஒருமா நிலம் நிலக்கொடையாக வழங்கப்பட்டிருந்துள்ளது.

**கல்வெட்டு :**

1. திருவிடையடிக்குக் கிழக்குத்திருமண்டபத்தாமரை யடிக்கு தெற்கு இக்கல்வெட்டிக்கொடுத்தபடி ஸ்வஸ்திஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௩௰௨ இராஜராஜ பா
2. ண்டி நாட்டு மதுராந்தக வளநாட்டுக் கருநிலக்குடி நாட்டுத் தேவதான ஸ்ரூஹ்ஜெயம் திருத்தங்கால் திருமலைமேல் நின்றருளின பரமஸ்வாமிகளுக்கு அமாவா ஸ்ய புறப்பட்டருளி எழுந்தருளு
3. கைக்கு வேண்டும் அமுதுபடி சாத்துப்படிகள் அரிசி தூணி பதக்கு பெலி வற்கத்துக் கறியமு துகளும் நெய்யமு [து] திருவிளக்கெண்ணை...யும் எண்ணைக்காப்பும்
4. மஞ்சட் காப்பும் அடைக்காயமுதும் இலையமுதும் சந்தனக் காப்பு கற்பூர அமுது மிளகு அமுது சீரக அமுதும் உப்பமுதும் மற்றும் வேண்டுவனவுக்கு நீக்கின
5. நீர் நிலமாவது இவ்வூர் பெருங்குளத்துப் பெருமடை கொடுத்தான்... கல்லின் குடிக்கரைக்கு மேற்கு ஒரு பக்கமடைய நிலம் ஒன்றே மூன்று மாவும்.
6. திருமஞ்சனச் சாலைப்புறம் நீக்கின நிலம்எட்டு மாவும் ஆக நிலம் ஒன்றரையே ஒரு மாவும் ஸ்ரீ வைஷ் வர்கள் கண்காணி திருச்சி த்ரகூட நாராயண நம்பியோடும் கூடக்கொண்டு.
7. இந்நிலம் நீக்கிக் குடுத்த சந்த்ராதித்தவற் செல்வதாக இட்டோம் மூல பருஷையோம் இத்திருமலை மேல் நின்றருளின பரம ஸ்வாமிகளுக்கு இக்கல்வெட்டுப்படியே
8. குடுத்தேன் இவை கோயிற் கணக்கு மானவேற் கலியன்ஶாஸன் எழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 226/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 13 + 1 + 1 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1070 - 1120 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 562/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பிற்பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| மன்னன் | : | கடையவர்மன் குலசேகரன் | எண் | : 5 |

இடம் : நின்ற நாராயணப்பெருமாள் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்

குறிப்புரை : திருத்தங்கல் திருமலைமேல் நின்றருளுகின்ற பெருமாளுக்கும், பிராட்டியாருக்கும் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்காக வேண்டி, முத்தூற்றுக்கூற்றத்து அந்தனூரைச் சேர்ந்த உய்யநின்றாடுவாரான காலிங்கராயரின் துணைவியார் சடகோபன் திருமங்கை நிலக்கொடை வழங்கியுள்ளமையைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தெவற்கு யாண்டு பதினெதிராமாண்டினெதி ராமாண்டு கருநிலக்குடி நாட்டு தேவதான ப்ரஹ்மதெயந் திருத்தங்காற் திருமலை மேல் நின்றருளின பரமஸ்வாமிகளுக்கு முத்தூற்றுக்கூற்றத்து அந்தனூர் சிறுகம்பூ

2. ருடையானுடையானுய்ய நின்றாடுவாரான உடையார் காலிங்கராயர் தேவியார் சடகோபன் திருமங்கை யாண்டாளு கந்த ருளிவித்த கரமார்ச்சை எம்பெருமானுக்கும் பிராட்டியார்க்கும் திருப்படி மாற்றுள்ளிட்ட பலபடி நிவந்தங்களுக்கு சந்திராதித்தவல் செல்வதாக இவ்வூர் மூலபருஷையார் பக்க

3. ல்விலை கொண்டிட்ட பூமியும் மனையுமாவதிவ்வூர் ஸ்ரீதெவேந்திரவல்லவப்பேரேரிக்கீழ் (பெரு) மடை தொடுத்த மருதங் காலான ஸ்ரீதேவிவாய்க்காலுக்குத் தெற்கு அய்யன் காலுக்கு கிழக்கு இவ்வூர்ளக்குங் குன்றக்காற் பாறைக்கோலால் சகூஙயதூஎபபதியம்

4. தெற்கு ருசருஎபசூபதஸ்ப விநிப பெருங்காலுக்கு தெற்கு நின்ற நாராயணப் பிலாற்றுக்குக் கிழக்கு.. லவம் பெருங்காலுக்குத் தெற்குத்திருமாலிருஞ் சோலை வதிக்கு

5. இவதிக்கு கிழக்கு [இ]மருதங்காலான ஸ்ரீதேவி வாய்க்காலுக்கு வடக்கு திருமாலிருஞ் சோலை வதிக்கு வடக்கு பம்கா

6. ........ தரு மாடக்க இவதிக்கு [கிழக்கு] சா குறை சூக ஆக நிபவும் ர்க்கீழ் மேலான நடுவில் நாராசத்துக்குத் தெற்கு கீழையூற் மங்கல வதிக்கு மேற்கு தெற்குப்புறம் இ மங்கல வதிக்கு வடக்கும் பள்ளிகொண்டான் கோ

7. யிலுக்கு மேலகிருன தெற்கு நோக்கிப் போன பெருந்தெருவுக்குக் கீழைக் குறுந்தெருவுக்குக் கிழக்கு கிழக்கிட்டு வடக்கடைய யிரண்டு மனை நீக்கியுள்ள மனைகளும் இ நிலம் ஒன்றேகாலும் இம்மூல பருஷை யார் பக்கல் விலை கொண்டிட்டளித்த திருமங்கையாண்டா

8. னித் திருமலைமேல் நின்றருளின பரமசுவாமிகளுக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 20 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1070 - 1120 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 552/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| மன்னன் | : | கோனேரின்மை கொண்டான் | எண் | : 6 |

இடம் : நின்ற நாராயணப்பெருமாள் கோயில் முன் மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இக்கோயில் மூலபருஷையரிடம் இறைவனின் நித்திய பூசைக்காக கொடுக்கப்பட்ட தானம்பற்றிய செய்தியினைத் தருகின்றது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவத்தி கோநேரின் மை கொண்டான் திருத்தங்கால் மூல பருஷை யாற்குத் தங்க
2. ளூற் திருமலை மேல் நின்றருளின பரமஸ்வாமிகள் தேவதான மிவ்வூர் மேல்பிடாகை ஸ்ரீ வைஷ்ணவரில்
3. ப்ராஹ்மணர் பக்கற் திருமல்லி நாட்டுத் தென் வெட்டி பற்றூர் விலை கொண்டு நாடு பிடித்த அமரிலாத தேவ
4. னுக்கு ஒற்றி வைக்கயாலே இவன் கடமையி றாதே அனுபவித்துப் போந்தானாகவும் பத்தொன்பதாவது
5. நாளிலே முத்தூற்றுக் கூற்றத்துக் கப்பலூருடையான் உய்யவந்தான் வீர சோழ தேவனுள்ளிட்டார் இம்மறவ
6. ர் பக்கலே விலை கொண்டார்களாகவும் இக்குளத்திற் கடமையிப் பரம ஸ்வாமிகளுக்குப் பண்டாடு பழநடை
7. இறுக்கப் பெற வேணுமென்று தாங்கள் நமக்குச் சொல்லுகையாலே நாங்கள் விலை கொண்ட நாள் முதல் தங்
8. களூற் புலக்குளங்களிறுக்கும் படியிலே இப்பரமஸ்வாமிகளுக்குக் கடமை யிறுப்பதாகச் சொன்னோம் இப்படி
9. கடமை கொள்ளப் பண்ணுக இவை செம்பி யதரயனெழுத்து யாண்டு உயநாள் ள இவை கோ[னேரி]
10. ராஜனெழுத்து இவை தொண்டைமான் எழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 228/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 13 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1070 - 1120 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 559/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பிற்பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| மன்னன் | : | சடையவர்மன் குலசேகரன் | எண் | : 7 |

இடம் : நின்ற நாராயணப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்.

குறிப்பு : திருத்தங்கல் திருமலைமேல் நின்றருள் புரிகின்ற பெருமாளுக்குச் செங்கழுநீர்த் திருப்பள்ளித் தாமஞ் சாத்தியருள வேண்டி ஏரிப்பணி செய்வாரின் செலவுக்காக வேண்டி திருமங்கையாண்டாள் என்பவர் வழங்கியுள்ள நிலக்கொடையினைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச்சக்கரவத்தி ஸ்ரீ குலசேகர தெவற்குயாண்டு பதின்மூன்றாவது கருநிலக்குடி நாட்டு தெவதானம் திருத்தங்காற் திருமலை மேல் நின்றருளின

2. பரமஸ்வாமி களுக்கு சந்திராதித்தவர் செங்கழுநீற் திருப்பள்ளித் தாமஞ் சாத்தியருள திரு வேரியை செய்வாற்கு ஜீவனத்துக்கு முத்தூற்றுக் கூற்றத்து அந்தனூர் சிறுகம்பூடையானுடையவ

3. னுய்யநின்றாடுவாரான உடையாந் காலிங்கராய ஞெவியார் சடகோபன் திருமங்கையாண்டாள் இத்திருத்தங்கால் ஆத்திரயன ஸ்ரீவல்லவன் கொற்றவல்லி பக்கலும் இவன் தம்பி

4. பக்கலும் விலை கொண்டிட்ட நிலமுங் கிணறுமாவது இவ்வூர் ஞெ வே வஸ்ரீ வல்லப பேராரிகீழ்கீழைமீதூர்கையிலும் மேலை மீசாகையிலுமாக இவ்வூரளக்கும்

5. குன்றக்கால் பாறைக் கொலால் நிலமிரண்டுமாவும் இநிலத்தில் பாதியால் வந்த கிணறுகளும் விலைகொண்டு டையான சடகோபன் திருமங்கையா

6. ண்டானேன் திருமலைமேல் நின்றருளின பரமஸ்வாமிகளுக்கு॥–

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 229/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 9+ |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1070 - 1120 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 560/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : 8 |
| மன்னன் | : | குலசேகரன் | | |

இடம் : நின்ற நாராயணப்பெருமாள் திருக்கோயில் முதல் திருச்சுற்று மேற்குச்சுவர்.

குறிப்புரை : திருத்தங்கல் மலைமேல் நின்று அருள் புரிகின்ற பெருமாளுக்குச் சோழமண்டலத்திலுள்ள திருவழுந்தூரைச் சேர்ந்த வில்லி திருமடமுடையான் என்பவர் திருநந்தாவிளக்கொன்றுக்காக நிலக்கொடை வழங்கியுள்ளார். இந்நிலம் சீதேவிப் பேரேரிக்கு மேற்கில் அமைந்திருந்துள்ளது. இக்காலக்கட்டத்தில் குன்றக்காற்பாறைக்கோல் என்ற அளவுகோல் நிலமளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளமை இக்கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவனசக்கரவத்தி ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு ஒன்பதா வதின் எதிராமாண்டு கருநிலக்குடி நாட்டுத் தேவ தானப் ப்ரஹ்மதேயம் திருத்தங்கால் திருமலை மேல் நின்றருளின பரமஸ்வாமிகளுக்குச் சோழ மண்டலத்து திருவழுந்தூர்

2. ஆட்கொண்ட வில்லி திருமடமுடையா னேன் வைத்த திருநந்தா விளக்கொன்றுக்கு விலைகொண்ட பூமியாவது இத்திருத்தங்கால் குண்டின கோத்ரத்து தேவன் சதுர்வேதிஷ ட்டன் தம்பி குன்றெடுத்தானும் இவன் தம்பி ஸ்ரீ வல்லஹனும் இம்மூவர் பக்க

3. லிலும் விலை கொண்டு இட்ட பூமியிவ்வூர் மேல்பிடாகைக் கொத்துப் பெருங்கிணற்றுப் பற்றுக்குக் கீழெல்லை சீதேவிப் பேரேரிக்கு மேற்கு தென்னெல்லை வாய்க்காலுக்கு வடக்கும் மேலேல்லை ஸர்வஸுதன் அனவரத தீரன் ஹட்டனும் வடக்குப் போன வாய்க்காலுக்குங்

4. கிழக்கும் வடவெல்லை கிழக்கு நோக்கிப் போன வாய்க்காலுக்குத் தெற்கும் ஆக இந்நான்கெல்லைக்குட்பட்ட இவ்வூர் நில மளக்குங் குன்றக் காற்பாறைக் கோலால் நிலம் முக்காணியரைக் காணியுமிக் கிணறு மிவன் வைச்ச திருநந்தா விளக்கொன்றும் சந்த்ராதித்தவற்செல்வதாக நீ

5. ரோடட்டிக் குடுத்தேன் ஆட்கொண்ட வில்லி திருமட முடையானேன் இத்திருமலை மேல் நின்றருளின பரமஸ்வாமிகளுக்கு உ

## த.நா.அ. தொல்லியல்துறை தொடர் எண் : 230/2005

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 11 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1216 - 1239 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 561/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : 9 |
| மன்னன் | : | முதலாம் சுந்தரபாண்டியன் | | |

| | | |
|---|---|---|
| இடம் | : | நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர். |
| குறிப்புரை | : | திருத்தங்கல் மலைமேல் நின்று அருள்புரிகின்ற பெருமாளுக்குத் திருத்தங்கலைச் சேர்ந்தவரும், குண்டின்யகோத்திரத்திற்குரியவருமான புருஷோத்தமன் என்பவர், திருநொந்தா விளக்கொன்றுக்காக வேண்டி திருத்தங்கலின் தென்பிடாகையான குடிவேலியில் கிணறும், நிலமும் வழங்கியுள்ளார். குன்றக் காற்பாறைக்கோல் என்ற அளவுகோல் நிலமளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. |

### கல்வெட்டு

1. ஸ்ரீ கோமாற பன்மரான *திரிபுவனச்சக்கரவத்திகள்* சோணாடு வழங்கியருளிய *ஸுந்தரபாண்டி* தெ வற்கு யாண்டு பதினொன்றாவது கருநிலக்குடி நாட்டுத் தேவதானப் பிரமதேயம் திருத்

2. தங்கால் திருமலைமேல் நின்றருளின *பரமஸ்வாமி*களுக்கு இவ்வூர் குண்டின்ய கோத்ரது [புருஷோத்தம] னேன் வைத்த திரு நந்தாவிளக்கு ஒன்றுக்கு *சந்த்ராதித்*தவற்செல்வதாக இட்ட கிணறும் பூமியும் ஆவது இவ்வூர் தென்பிடாகை குடி வேலியில் வெ.... பாடு கிணற்று கிணற்றுப் பற்றிலும் ஆக இ

3. வ்வூரளக்கும் குன்றக் காற்பாறை கோலால் நிலம் க மா. இந்நிலமொரு மாவும் பூமிக்கும் கிணற்றுக்கும் மேன்னோக்கிய·மரமும் திருநந்தா விளக்குப் புறமாக *சந்த்ராதித்*வற் செல்வதாக நீரோடட்டிக்குடுத்தேன் புருஷோத்தமன் காலியராயனேன் திருமலைமேல் நின்றருளின பரமஸ்வாமிகளுக்கு வ

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 231/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 3 + 2 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 13ம் நூ.ஆ. |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 558/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பிற்பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| மன்னன் | : | கடையவர்மன் குலசேகரன் | எண் | : 10 |

இடம் : நின்ற நாராயணப் பெருமாள் கோயில் முதல் திருச்சுற்று மேற்குச் சுவர்.

குறிப்பு : திருத்தங்கலில் மலைமேல் நின்றருள் புரிகின்ற பெருமாளுக்கு ஆட்கொண்டி என்பவரும் திருமகள் என்பவரும் முறையே 13, 12 ஆடுகளை வழங்கியுள்ளமையைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசெகரதெவற்குயாண்டு ௩வதினெதிர் இரண்டாவது கருநிலக்குடி நாட்டு தேவதானம் திருத்தங்காற் திருமலை மேல் நின்றருளி

2. ன பரமஸ்வாமிகளுக்கு சந்த்ராதித்தவ ஸந்த்ர ராதீபங்கள் செலுத்துவதாக இவ்வூர் குண்டினன் திருவரங்க தேவன்னவர ததானன் ப்ராஹ்மணி ஆட்கொண்டிஇட்ட ஆடு ௰௩ம் இக்கோயில் ஸ்ரீவைஷ்ணவனா

3. ன் சூ [ர்] ய [ன்] நாராயணன் திருவாயகுலமுடையான் ப்ராஹ்மணி திருமகள் கொண்டிட்ட ஆடு௰௨ ம் ஆக ஆடு ௨௰௫ இவ்வாடு இருபத்தஞ்சும் கைய்கொண்டு நித்த மாழாக்கு நெய்

4. [அ] ளப் பானாகக் கைக்கொண்[ட] ஆயன் முத்தனெட்டி

| த.நா.அ. தொல்லியல்துறை | | | தொடர் எண் : 232/2005 | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 9 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 541/1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| மன்னன் | : | குலசேகரதேவர் | எண் | : 11 |

இடம் : அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் வடபுற அதிட்டானம்.

குறிப்புரை : திருத்தங்கல் மலைமேல் நின்றருள் புரிகின்ற பெருமாளுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடையைப் பற்றித் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு ௯ வது சித்திரை மீ ௹உ குன்றப் பாறைக் கோலால்

2. கருநிலக்குடி நாட்டு திருத்தங்கால் பற்று கீழ்எல்லை முடந்தை ஆறு தென்னெல்லை
3. தாழிஓடை மேலெல்லை ஆய்க்குடி நத்தத்துக்கு கிழக்கு இவூர் வடமேற்குக் கல்லூரில் நிர்க்கும்

4. சயனான் நீரட்டைகுளத்துக்கு திருவாழிக்குத்தென் பட்டி வடபட்டி வயலுக்கு கீழக்கு வடக்கு எல்லை ஆறும்

5. ஆகயிப் பெருனான் கெல்லைக்குள் தேவேந்திர வல்லப பேரேரிவ்வூர் சூழ் [ந்த] பற்றுமிக்கோலளந்

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 233/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : | 38 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 806 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | |
| எழுத்து | : | வட்டெழுத்து | | | |
| அரசு | : | முற்பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : | 12 |
| மன்னன் | : | முதலாம் வரகுண பாண்டியன் | | | |

இடம் : நின்ற நாராயணப் பெருமாள் கோயில் சன்னதி முன்மண்டப வெளிப்புறம் நுழைவாயிலுக்கு அருகில் தரையில் தளமாகப் பாவப்பட்டுள்ள கல்.

குறிப்பு : அளற்று நாட்டு நல்லூர்க் கிழவன் வைத்த நந்தா விளக்கு ஒன்றை எரிக்க 100 ஆடுகளை இருவர் பெற்றதைக் கூறும் கல்வெட்டு.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறஞ்சடை
2. யர்க்கு யாண்டு முப்
3. பத்தைஞ்சு இதனெதி
4. ர் மூன்று இவ்வாண்டு
5. தேவதானத் திருத்த
6. ங் கால் திருவேங்கட
7. நிலைப் பெருமானடி
8. களுக்கு அளற்று நாட்டு
9. நல்லூர் கிழவன்...
10. ன் திரு நந்தாவிள
11. க் கொன்றுக்கு வைத்த
12. சாவா மூவாப் பேராடுநூ
13. று இவை இவ்வூர்க் கோ
14. [வ] லன் தேவ[ன்] காடனு
15. வேலங்காடனும்
16. கொண்டார்.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 234/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 7 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1216 - 1239 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு: ஆண்டு அறிக்கை | |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : 550/1922 |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | கோனேரின்மை கொண்டான் | எண் | : 13 |
| இடம் | : | அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் அர்த்தமண்டபம் தென்சுவர். | | |
| குறிப்புரை | : | இவ்வூர் இறைவர்க்கும், சந்திபூசைக்கும் மற்றும் உள்ளகோயில் வைஷ்ணவர், நம்பு செய்பவர்களுக்குமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தானத்தைப் பற்றிக் குறிக்கிறது. இத்தானத்தை மழவராயன் எனும் மந்திரி அரசனுக்குச் சொல்லி நடப்பித்ததாகக் குறிப்பிடுகின்றது. | | |

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் கருநிலக்குடி நாட்டுத்தேவதானந்
2. திருத்தங்காற் திருமலைமேல் நின்றருளின பரமசுவாமிகள் கோயில்ஸ்ரீவைஷ்ணவற்கு நம்பு செய்
3. வானுக்கும் இப்பரம சுவாமிகளுக்குச் சிற்றூருடையான் சோறனுய்ய நின்றாடு வானான குருகு
4. லத்தரையன் இந்நாட்டு ஆனையூர் ஊரார் பக்கல் விலை கொண்ட பெரிய குளத்துக்கு விலையோலைப் படி கீழெல்லை பாடி காப்பான் ஆனை
5. யூர் நாடாழ்வான் குடியிருப்பான் நத்தத்துக்குஞ் சாத்தன் பெரிய கருப்பன் செய் மேல் வரம்புக்கும் மேற்கு தென்னெல்லை பட்டனய்யன் செ
6. ய்யிற் தென் வரம்புக்கும் மாலகுழவன் பெரிய செய்த தென் வரம்புக்கும் குறளன் விளர்த்தியோடு செய்த் தென்வரம்புக்கும் வடக்கு மே
7. லெல்லை இந்தக் குறிச்சிக் கீழெல்லைக்கும் அடங்கழிக் கீழெல்லைக்கும் ஆயக்குடிக் கீழெல்லைக்கும்.
8. கிழக்கு வடவெல்லை கல்லி ஏரிக்குளத்து நீர்க்கோவைக்கும் குட.....குளத்து வடவெல்லைக்கும்
9. தெற்கு ஆக இநான் கெல்லைக்குட்பட்ட நீர் நிலமும் கருஞ்செய் புன்செய்யும் தோட்டமும் நத்த
10. மும் மற்றும் எப்பெயர்பட்டினவும் உட்பட ஊரில் பிரித்து வேறு முதலாக்கித் தென்னவன் சிற்றூரென்

11. னும் பேரால் இவனுக்கு மிவன் வற்கத்தார்க்கும் காணியாய் ஏழாவது முதல் அந்தராயமும் வினியோ

12. கமும் வெட்டிப் பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்ரகப் பேறும் மற்று மெற்பட்டனவு முட்படத்

13. தேவதான இறையிலியாயிறுப்பதாக இடப்பெறவேணுமென்று மழவராயர் நமக்குச் சொன்னமையிலிப்

14. பரமசுவாமிகளுக்கு சுந்தரபாண்டியன் சந்திக்குத் திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டு

15. நிவந்தங்களுக்குச் சிற்றூருடையான் சோறனுய்யநின் றாடுவானான குருகுலத்தரையனிந் நாட்டு ஆனையூர் ஊரார்

16. பக்கல் விலை கொண்ட இவ்வூர் பெரிய குளம் விலையோலைப்படி நான் கெல்லைக் குட்பட்ட நிலம்

17. ஊறிற் பிரித்து வேறு முதலாக்கித் தென்னவன் சிற்றூரென்னும் பேரால் இவனுக்கு மிவன் வற்கத்தாருக்குங்

18. காணியாயிவ் வாண்டு முதலந்தராயமும் வினியோகமும் வெட்டிப் பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்ரகப் பேறு மற்று

19. மெப்பேற் பட்டனவு முட்படத் தேவதான இறையிலியாயயிறுப்பதாக இட்டு.... வரியிலா ரெழுத்திட்ட உள்வரியுங் கே

20. ழ்வியுந் தரச் சொன்னோம் கைக் கொண்டு திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டு நிவந்தங்கள் செல்லப் பண்ணி இப்ப

21. டி சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டுவித்துக் கொழ்க இவை மதுரோதைய வளநாட்டுக் கான...

22. னாயிருக்கை யுழக்குடி முத்தனாட் கொண்டவில்லி....னெழுத்து உ யாண்டு ஏழாவது நாள் தொ

23. ண்ணூற்றெட்டு இவை செவ்விருக்கை நாட்டுச் சக்கரபாணி நல்லூர் அரயன் விரதமுடித்தானான குருகுலராய [னெழுத்து] இவை அண்டநாட்டுப்

24. பெரு மணலூர் மந்திரி இராமனான பல்லவராயன் எழுத்து

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 7 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 551 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | - | எண் | : 14 |

இடம் : அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் அர்த்த மண்டபத் தென் சுவர்.

குறிப்புரை : தொடக்கமில்லை. முன்கல்வெட்டில் சொல்லப்பட்ட ஆணையினை நடப்பித்த செய்தியினைத் தெரிவிக்கின்றது இக்கல்வெட்டு.

**கல்வெட்டு**

1. கருநிலக்குடி நாட்டுத் தேவதானந் திருத்தங்காற் திருமலை மேனின்ற ருளின பரமசுவாமிகளுக்குச் சுந்தரபாண்டியன் சந்திக்குத் திருப்படி மாற்று
2. ள்ளிட்டு வேண்டு நிமந்தங்களுக்கு ஏழாவது முதலந்தராயமும் வினியோகமும் வெட்டிப் பாட்டமும் பஞ்சுபீலி சந்துவிக்கிர ஹப் பேறு மற்று மெப்பேற்
3. பட்டனவு முட்படத் தேவதான இறையிலியாயிருப்பதாகச் சிற்றூருடையான் சோறனுய்ய நின்றாடுவானான குருகுலத் தரயர் இந்நாட்டு ஆனையூர்.
4. ஊரார் பக்கல் விலைகொண்ட இவ்வூர் பெரியகுளத்துக்கு விலையோலைப்படி கீழெல்லை பாடி காப்பான் ஆனையூர் நாடாழ்வான் குடியிருப்பான
5. நத்தத்துக்குஞ்..... சாத்தன்.... கருஞ்செய் மேல் வரம்புக்கு மேற்குந் தென்னெல்லை பட்டனப்பன் செய்யிற் தென் வரம்புக்கும் மான்குடி கிழவன்
6. பெரிய செய்த் தென்வரம்புக்கும் குறளன் விளாத்தியோடு செய் தென் வரம்புக்கும் வடக்கு மேலெல்லை இத்திக் குறிச்சிக் கீழெல்லைக்கும்
7. அடங்கழிக் கீழெல்லைக்கும் ஆய்க்குடிக் குளத்துக் கீழெல்லைக்குங் கிழக்கு வடவெல்லை கல்லியேரிக் குளத்து நீர் கோவைக்குங் குமிழங் குளத்து வடவெல்லைக்குத் தெற்குமாக.
8. இந் நான் கெல்லைக்குட்பட்ட நீர்நிலமும் கருஞ்செயும் தோட்டமும் நத்தமும் மற்று மெப்பேற்பட்டனவும் முட்பட்ட ஊரிற் பிறித்து வேறு முதலாக்கித்
9. தென்னவன் சிற்றூர் என்னும் பேராலிவருக்குமிவர் வற்கத் தாற்குங் காணியாக யந்தராயமும் வினியோகமும் வெட்டிப்பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்கிரகப்
10. பேறுமற்று மெப்பேற்பட்டனவு முட்பட இவ்வாண்டு முதல் தேவதான இறையிலியாயிருப்பதாக இட்டமைக்கு இவைபுரவரி திணைக்கள நாயகம்

11. கருங்குடிநாட்டுக் கீழ்நெட்டூருடையான் கரியமாலழகனான உத்தமபாண்டிய விழுப்பரையன் எழுத்து இவை புரவரிதிணைக்கள நாயகம் ஈசனூருடையான்

12. ஆதித்த தேவனாழியங்கைய னாதித்திவாகரன் எழுத்து இவை புரவரி திணைக்கள நாயகத்தியனூருடை

13. யான் வேளானுதய திவாகரனான குணராயனெழுத்து இவை புரவரி திணைக்கள நாயகமிழலைக் கூற்ற

14. த்துக் கீழ்கூற்றுத் தச்சனூருடையான் சேவகத் தேவனழகனான வாணவன் விழுப்பரைய னெழுத்து இவை

15. புரவரி திணைக்கள நாயக மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றியுடையான் திருப்பூவன முடையான் திருவரங் தேவ

16. னான விசயராய னெழுத்து இவை புரவரி திணைக்கள நாயக மிழலைக் கூற்றத்து நடுவிற் கூற்றுத் தச்சநென் மலியுடையான்

17. திருவுடையான் நாராயணனானத் தரயன் எழுத்து இவை புரவரிதிணைக் கள நாயகம் வடதலைச் செம்பில் நாட்டு ஆய்க்கு

18. டியான் சோமதேவனழகிய மணவாளனான வில்லவ ராயன் எழுத்து இவை கீட்செம்பில் நாட்டு மாலன் திருப்

19. புல்லாணி மாதவனான நுளம்பாதாரயன் எழுத்து இவை வானவரிசன் எழுத்து இவை மதுரோதைய வள நாட்டுக் காளையிரு

20. க்கை உழக்குடி முத்தன் திருமலையுடையானான சுந்தர பாண்டிய வத்தராயன் எழுத்து இவை மிழலைக் கூற்றத்து வடபாம்பாற்று

21. மருப்பேராட்சி வெம்பூருடையானருளாளன் சீராமதே வன் சுந்தபாண்டிய காடுவெட்டி எழுத்து இவை

22. சதிராயனெழுத்து இவை தொண்டை மானெழுத்து இவை காலிங்கராயன் எழுத்து இவை வாணாதிராயன் எழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 236/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 2 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1238 - 1239 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 548 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | சடாவர்மன் குலசேகரன் | எண் | : 15 |

இடம் : அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் மகா மண்டபத்தின் தெற்குச் சுவர்

குறிப்புரை : சோறன் உய்ய நின்றாடுவான் குருகுலத் தரையன் தன் பேரால் அமைத்த பூசைக்கு ஆனையூரில் விலைக்கு வாங்கிக் கொடுக்கப்பட்ட நிலத்தானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும் சுந்தரபாண்டியன் சந்திக்குரிய பூசைக்குமாக வழங்கப்பட்ட வரி முதலியவற்றைத் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச் சடைய வன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு உவது கருநில
2. க்குடி நாட்டுத் தேவதான பிரமதேயந் திருத்தங்காற் திருமலை மேல் நின்றருளின பரமசுவாமிகளுக்குச் சிற்றூ
3. ருடையான் சோறனுய்ய நின்றாடுவானான குருகுலத்தரையனேன் என்பேராற் கட்டின பூசைக்குத் திருப்போனக [ம்]
4. நாலுக்கு அரிசி பதினாறு நாழிக்கும் மற்றும் வேண்டும் அமுதுபடி சாத்துப்படிக்கும் உதகபூர்வதானம் பண்ணிக்கு
5. டுத்த பூமியாவது இந்நாட்டு ஆனையூர் ஊரார் பக்கல் நான் விலை கொண்டுடையேனாய் இப்பரம சுவாமிகளுக்கு
6. சுந்தரபாண்டியன் பூசைக்கு அடைத்துக் கடமையிறுத்து வருகிற ஆனையூரான தென்னவன் சிற்றூரில் நிலத்
7. திலே இக்குளம் நிலமளந்து கடமையிறுத்து வருகிற பெரிய கோலா
8. லே புன்னைக் கிணறுட்பட வடக்கடைய நிலம் ரு இந்நிலம் அஞ்சுமாவும் காராண்மை
9. ம உதகதானம் பண்ணிக் குடுத்தேன் சந்திராதித்தவரை செல்வதாகக் குருகுலத்தரயனே
10. ன் இத்திருமலை மேல் நின்றருளின பரமசுவாமி களுக்கு இவை சிற்றூருடையான்
11. சோறனுய்ய நின்றாடுவானான குருகுலத் தரயன் எழுத்து இப்படிக்கு
12. இவை திருமல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூருடையானுய்ய நின்றாடுவான் வீரசோழன் எழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 237/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி.13ஆம் நூற்றாண்டு |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : ARE 553 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | | எண் | : 16 |

இடம் : அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் மகாமண்டபம் தென்சுவர்

குறிப்புரை : திருமல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூர் குருகுலத் தரையன் இத்திருத்தங்கல் கோயில் திருமண்டபம் முதலான கோயில்ப் பகுதிகளைக் கருங்கல்லால் அமைத்தான். அத்துடன் சுந்தரபாண்டியன் பூசைக்குத் தேவையான நித்தம் நானாழிப் பிரசாதம் மற்றும் திருத்தம்பலமும் கொடுத்ததைத் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு :**

1............

2. மல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூருடையான் சோறனுய்ய நின்றாடுவானான குருகுலத்தரய
3. னுக்குத் தான் திருத்தங்காலூரான் கோயில் ஜீரணோததா ரணம்பண்ணித் திருமண்டப முதலாகச் சிலையாலே செய்தபடியுந்
4. தன்காணி ஆனையூரான தென்னவன் சிற்றூரிற்கடமை அந்தராய மற்று மெய்பேற் பட்டனவுந் திருத்தங்கா லூரானுக்கு இறுப்பதாகத்
5. தான் வரியிலிடுவித்த படியு மற்று மிந்நில....செய்த தன் மைகளுக்கெல்லா மூல பருஷத்துஇக்கோயிலுக்கு ஸ்ரீ வை
6. ஷணவ அனுஸஸ்தா ந ழ பண்ணுகிற திருவரங்க மானிதாஸனும் திருத்தங்காலூரானுக்கு விண்ணபஞ்செய்து நமக்குஞ்
7. சொல்லிச் சந்தானச் சாமம் அடைக்கப் பெறவேணுமென்றமையில்.... பாண்டியன் பூசை அமுது செய்தருளின
8. வாறே நித்த நானாழி பிரஸாதமும் இரண்டு திருத்தம்பலமும் புறம் பெழுந்தருளி அமுது செய்தருளின விவரங்களில் ஒரு தளிகை
9. வ்ரஸாதமும் பிசிருந்திருக்கைச் சுருள் அமுது செய்தருளின திருத்தம்பலமும் பெறக் கடவதாகச் சொன்னோம் இப்படித்
10. தன் வற்கத்தார்க்குஞ் சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டு வித்துக் கொள்க அருளால் இவை திருவாலி நாடு தாஸன் எழுத்து.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 238/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 4 + 1 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி.13ம் நூ.ஆ. |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 546 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பிற்பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | எண் | : 17 |

இடம் : நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர்.

குறிப்பு : கோவிலில் ராமாயணம் வாசிக்க திருவரங்க தேவன் குன்றெடுத்தான் எனும் இருவர் நிலம் தானம் செய்தததைக் கூறும் கல்வெட்டு.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ கோமாறவன்மரான த்ரிபுவனச்சக்ரவத்திகள்
2. ஸ்ரீ ஸுந்தரபாண்ட்ய ெவறகு யாண்டு நாலாவதினெதிராமா
3. ண்டு கருநிலக்குடி நாட்டுத் தேவதான ப்ரஹ்மெயம் தி
4. ருத்தங்காற் கு ண்டு மொஷத்துத் திருவரங்கதெவன் குனறெடு
5. ரங்கதெவனுய்யக் கொழ்வானுமிருவோமு உஹாபாரதவத்தியாக இட்ட ஹூசி
6. யாவதுஇவூற்ெவெந்வஹூப்பேரேக் கீழ் மருதங்கா லான ஸ்ரீதேவி வாய்க்
7. காலுக்கு தெற்கு ஆறங்கண்ணாற்றுத் திருமாலிருஞ் சோலை வதிக்குக்
8. கிழக்கு மூன்றாம் பாகத்திற் கிழக்கடைய நிலம
9. ரை மாவு மிதிற்கிணற் றொரு பாதியுமிவ்வூர் வடகீ
10. ழ் பிடாகை கருங்கோட்டைக்கும் விலைகளுக்
11. குங் கிழக்குந் திருப்பனை யூரான ஸ்ரீ குலசேகரச்
12. ஶதுவெதிமங்கலத்து எல்லைக்கு மேற்கு மிவூற்
13. குளக்காலுக்குத் தெற்கும் எங்கள் செம்பாதியாற்
14. கருஞ்செய்நிலம் ந மாவுமாக இவூருநிலமளக்
15. குங்குன்றக்காற்பாறைக் கோலால் நிலமாறுமாவரை
16. யுங்கைக் கொண்டு இவூருக்கு வடக்கு நாகணையா
17. ன் கிணற்றுக்குக் கிழக்கு நாங்கள் செய்த மண்டபத்திலே
18. யுந் திருத்தங்காலூரான் திருமுன்பு மஹாபாரதம்
19. ஸ்ரீ ராமாயணமும் புராணங்களும் வஜராதித
20. வாசிப்பதாக இட்டோம் திருவரங்கதேவன்
21. குன்றெடுத்தானுமென் தம்பி திருவரங்க தேவனுய்யக்
22. கொண்டாழ்வானு மிவிரு வோமும்॥—

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 239/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 6 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 553 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | குலசேகரன் | எண் | : 18 |

இடம் : நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபம் வடக்கு.

குறிப்புரை : திருத்தங்கல் திருமலை மேல் நின்றருள் புரிகின்ற பெருமாள் திருக்கோயிலில் திருச்சுற்றில் திருவரங்கதேவன் திருமண்டபம் என்ற பெயரில் மண்டபம்அமைக்கப்பட்டு நரசிங்கப் பெருமாளுக்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்டு வேண்டும் நித்த நிவந்தங்களின் செலவினங்களுக் காக வேண்டி நிலக்கொடையும் வழங்கப்பட்டிருந்தமையை இக்கல்வெட்டு புலப்படுத்துகிறது.

**கல்வெட்டு**

1. ஸ்ரீ ஸ்ரீ கோமா [ரப] ன்மரான *திரிபுவனசக்கரவத்தி*கள் ஸ்ரீ குல*சேகரதேவ*ற்கு யாண்டு

2. சு வது வ்ருட்சிக நாயற்று ௰௯ *சுவார வக்ஷத்து திர*யோ*தசி*யும் *வியாழக்கிழமையும்* பெற்ற சோதி நாள் கரு [நிலக்குடி நா]

3. ட்டுத் தேவதான *ப்ரஹ்ம*தெயம் திருத்தங்கால்த்திரு மலை மேல் நின்றருளின பரமஸ்வாமிகள் கோயிலில் மேலை

4. திருச்சுற்றிலும் வடக்கில் திருச்சுற்றிலும் நாங்கள் 'செய்வித்த திருவரங்க தேவன் திருமண்டபமு கோயிலு

5. [ம்] செய்வித்து உகந்தருளிவித்த சிங்கப் பெருமாளுக்கு கு*ணி*ன *சோத்ரத்து* திருவரங்க தேவனூரார் கேழ்

6. வனும் குன்றெடுத்தான் திருவரங்க தேவனு மிவனுள்ளிட்டோமு மமுதுபடி சாத்துபடி உள்ளிட்டு

7. வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு உதகம் பண்ணிக் குடுத்த *ஹூமி*யாவது இவ்வூர் தேவேந்திர வல்லஹ ப் பேரேரிக்கு கீழ் மருதங்

8. [க] லானா ஸ்ரீ தெவி வாய்க்காலுக்குத் தெற்கு வயக்கலுக்கு *கூ* கக்கு கபாடகத்தில் மேற்கடைய சும் வடக்கு உகூ ஆகரு

9. ல் மேற்கடைய ருடம் தெற்கு நின்ற நாராயண.கக்கு கூபி க்கு.. ல் மேற்கடையரு௨ ம் எகூதெக்குக்

10. கூத் திருமாருஞ் சோலை வதிக்கு கூிக்கு கல் செய்ருசல் கூலிய்ரு௨ மஎநெல் மேற்கடைய ரு ௨ ம் கெூ க

11. குவகூ இவ்வதிக்கு கூிக்கு உ நெல் மேற்கடைய ரு சும் வடக்கில் மடைப்பற்று நின்ற நாராயண வாய்க்காலுக்கு

12. வடக்கு சகூ நின்ற நாராயண வதிக்கு கூ அ நெல்க்கு றையா..... கூய்ரு பணம் ளுக்குக்கூட த்தி[ரு]மாலிருஞ் சோலை வதிக்கு.... கருபம் ௨ந

13. ருபம் கூ குறை ருபாஉ யளுக்கு உகூ ருபஊக்குறை ரு சுணம் வடக்குக் கூி ரு

14. றை ரு க்கு சகூவதிக்கு கூக்குறை ஜுஆக இவ்வூர் நிலமளக்குங் குறைக்கால்ப்பாறை

15. கோலால் ருவகூஉஎஜு இந்நில மெட்டு மாக் காணி முந்திரிகைக் கீழ் முக்காலே அரைக்காலும் அமுதுபடி சாத்துப்படி உள்ளுட்

16. டு வேண்டும் நித்த நிமந்தங்கள் சந்ராதி த்தவற் செல்வதாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்வதாக உத கம்ப

17. ண்ணிக் குடுத்தோம் சிங்கப் பெருமாளுக்கு திருவரங்க தேவனூய்யகு கோபவானும் குன்றெடுத்தான் தி

18. ருவரங்க தேவன் உள்ளிட்டோமும் இப்படி ஸம்மதித்து உத கம் பண்ணிக் குடுத்த குண்டின மோகூத்து திரு

19. வரங்க ே ஷவன் ஊயக் கொடவன் எழுத்து இப்படி ஸம்மதித்து உஃகம் பண்ணிக் குடுக்கக்... கொண்.....

20. ருவரங்க ஷேவன் எழுத்து இப்படி ஸம்மஷி த்து உஃ கம் பண்ணிக் குடுத்த உயக கொழவான் திருவரங்க

21. ஷே வன் எழுத்து இப்படி ஸம்மஷி த்து உ ஃ கம் பண்ணிகுடுத்து குன்றெடுத்தான் வீற்றிருந்தான் எழுத்து

22. ஸ்வஸ்தி ஸமஸ்தபுவநாஷ்ரய ஸ்ரீபிருத்விவல்லபமஹாராஜாதிராஜ பரமேஷ்வர . . . ஜன கௌணூ.ரு. நரங் . . . ஸீவ கௌஸிசி . . . மாஷெஷ்வரஜஜூவ . . .

23. வஷயா கரகாளு செவபுஉாநவுஜூ கௌ கூ . . . தேன்

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 11 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 542 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : 19 |
| அரசன் | : | - | | |
| இடம் | : | நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் தெற்கு | | |

குறிப்புரை : கருநிலக்குடி நாட்டு ஆனையூரான தென்னவன் சிற்றூர் திருத்தங்கல் திருமலைமேல் நின்றருள்கின்ற பெருமாளுக்குரிய தேவதான இறையிலியாக இருந்துள்ளது. இதன்படி வெட்டப்பட்டிருந்த கல்வெட்டின்படியே கடமையிறுப்பதை உறுதி செய்யும் வாசகமாக இக்கல்வெட்டு காணப்படுகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ திரு வனச்சக்ரவத்தி கோநேரின் மை கொண்டான் கருநிலக்குடி நாட்டுத் திருத்தங்கால் மூலபருஷை
2 யார்க்குத்தாங்கால் நின்ற திருமலை மேல்நின்றருளின பரஸ்வாமிகள் தேவதான மிந்நாட்டு ஆனையூரான தென்னவ
3 ன் சிற்றூர் நான்கெல்லைக்கு[ம்] திருவாழிக் கல்லுக்குட்பட்ட நிலத்திற் பழந்தேவ தானம் பள்ளிச் சந்தநீக்
4 கியுள்ள நீர் நிலமுங்கருஞ் செய் புன்செய் நத்தமுந் தோட்டமுங் குளமுங்குளப் பரிப்பு முட்பட்ட நீர்நில முன்னுடையா
5 ரைத் தவிர்த்துத் தங்களூருடன் ஒரூரொருபுர வாக்கி இப்பரஸ்வாமிகளுக்குத் தேவதான இறையிலியாக முன்பு வெ
6 ட்டின கல்வெட்டின்படியிலே கடமையிறுப்ப தாகச் சொன்னோம் இப்படி சந்த்ராதித்தவற் செல்வதாக
7 க் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டி வித்துக்கொள்க இவை அரும்பொற் கூற்றத்துப் புதுப்பேற்குளத்
8 தாழ்வானாண்ட பிரானழகனான வ.......ப் பாண்டிய விழுப்பரய னெழுத்து யாண்டு யக நாள் அளசயக
9 இவை அரும் பொற் கூற்றத்துக் கண்ணன் கீரங்குடிப் பொன்பற்றியுடையான் திருப்பழ வனமுடையானா
10 ன சுந்தரபாண்டிய வில்லவராயன் எழுத்து இவை செல்விருக்கை நாட்டுச் சகர பாணி நல்லூரரை
11 யன் விரதமுடித்தானான பல்லவராயன் எழுத்து

## த.நா.அ. தொல்லியல்துறை   தொடர் எண் : 241/2005

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 17 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 547 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | எண் | : 20 |

இடம் : நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் தெற்கு

குறிப்புரை : திருத்தங்கலில் மலைமேல் நின்றருள் புரிகின்ற பெருமாளுக்கு திருவீதி திருப்பணி செய்யும் பணியை மேற்கொண்டிருப்பவர்களுக்கு மடப்புறமாக திருத்தங்கலில் தேவேந்திர வல்லபப் பேரேரிக்குக் கிழக்கிலிருந்த சீதேவி வாய்க்காலுக்குத் தெற்கிலிருந்த நிலம் கொடையாக வழங்கப்பட்டமையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்பரான *தி*ஹுவனச் சக்கரவத்திகள் சோணாடு கொண்டு

2. முடிகொண்ட சோழபுரத்து வீ*ராஹி*ஷேகம்பண்ணி யருளின ஸ்ரீ

3. ஸுநு பாண்டிய தெ வற்கு யாண்டு பதினேழாவது ஆவணி மாஸங் கருநி

4. லக்குடி நாட்டு தேவதான *ஐ*ஹுஜெயிந் திருத்தங் காற் திருமலை மேல்நின்றருளின *வுராஜஸ்வா*

5. மிகளுக்குத் திருவீதி திருப்பணி செய்யும் ஜனங்களுக்கு மடப்புறமாக அமுது செய்ய வேண்டுவனவு

6. க்கு இவ்வூர் முற மனை ஸோ மயாஜி சதுவெ்ஷி ஹட்டந் ஸரும *ஐ*ஹஸ்வதி ஸ்வரத்து... க்ஷஸம ஷுத

7. ....... ஜகது பாஜயேன் அவற்கு *ஐ*ஷானம் பண்ணிக்கு

8. டுத்த ஹுமியாவது இவ்வூர் ஷேவேந்திர வல்லபப் பேரே

9. ரிக்கீழ் மருதங்காலான சீதேவி வாக்காலுக்குத் தெற்கு நா

10. லாங் கண்ணாற்று அமனகக்காலுக்குக் கிழக்கு நாலாம் ப

11. ா ஸநத்தில் இவ்வூர் நிலமளக்குங் குன்றக்காற்பாறை க் கே

12. ா ல் கீழ்க்கடைய நிலமுக்காணியும் அஞ்சாங்க.

13. ண்ணாற்று நாலாம் பாஸநத்திற் கீழ்க்கடைய நிலம் ஒரு

14. மாவும் ஆக நிலமாகாணியும் சந்த்ராதித்தவற் செல்வதாக உ

15. தக வசுவஷானம் பண்ணிக் குடுத்தேன் ஸோமயாஜி சதுவெ

16. த ஹட்டஸோம வாஹஸ்வதி ஸவத்துஸோம ஸமஸ்வா சிற

17. ஸ ஜூ து பாஜி யேன் திருமலை மேல் நின்றருளின பரமஸ்வா

18. மிகளுக்கு

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 242/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 2 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 548 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியன் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | குலசேகரன் | எண் | : 21 |
| இடம் | : | நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் தெற்கு | | |
| குறிப்புரை | : | திருத்தங்கல் மலைமேல் நின்றருள் புரிகின்ற பெருமாளுக்கு உய்ய நின்றாடுவானான குருகுலத் தரையன், ஆனையூரான தென்னவன் சிற்றூரிலிருந்த நிலத்தை வழங்கியமையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. | | |

1. ஸ்வஸ்திஸ்ரீ [கோ] ச்சடைய பன்மரான த்ரிபுவன சக்ரதவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு ௨வது கருநில
2. [க்குடி நாட்டு] தேவதான ப்ரஹ்மதேயந் திருத்தங்காற் றிருமலை மேல் நின்றருளின வரஹஸ்வாமி களுக்குச் சிற்றூ
3. ருடையான் [சோரன்] உய்ய நின்றாடுவானான குருகுலத்தரய னேன் என் பேராற் கட்டின சந்திக்குத் திருப்பொன்
4. நாலுக்கு அரிசி பதினறு நாழிக்கும் மற்றும் வேண்டும் அமுது படி சாத்துபடிக்கும் உதகபூர்வ தானம் பண்ணிக்கு
5. டுத்த பூமியாவது இந்நாட்டு ஆனையூர் ஊரார்பக்கல் நான் விலை கொண்டு டை யேனாய் இ வரஹஸ்வாமிகள்
6. ஸ்ரீஹரவாணுக்கு பூஜைக்கு அடைத்துக் கடமையிறுத்து வருகிற ஆனையூரான தென்னவன் சிற்றூர் நிலத்
7. திலே இக்குளம் நில மளந்து கடமையிறுத்து வருகிற பெரிய கோலால்
8. மேல் புன்னைக் கிணறுட்பட வடக்கடைய நிரு இந்நிலம் அஞ்சுமாவும் காராண்மை
9. ம உதக பூர்வதானம் பண்ணிக் குடுத்தோன் சந்த்ராதித்தவற் செல்வதாக குடுத்தா
10. ன் இத்திரு மலைமேல் நின்றருளின வரஹஸ்வாமி களுக்கு இவை சிற்றூருடையான்
11. சோறனுய்ய நின்றாடு வானான குருகுலத் தரயன் எழுத்துஇப்படிக்கு இவை திருமல்லி
12. நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூருடையானுய்ய நின்றாடுவான் வீரசோழன் எழுத்து

## த.நா.அ. தொல்லியல்துறை  தொடர் எண் : 243/2005

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 7 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி.1222 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| ஆண்டு அறிக்கை | | : 549 / 1922 | | |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | முதலாம் சுந்தரபாண்டியன் | எண் | : 22 |
| இடம் | : | நின்ற நாராயணப் பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் தெற்கு மண்டபம் | | |
| குறிப்புரை | : | திருத்தங்கல் நின்ற நாராயணப் பெருமாள் கோயிலில் சுந்தரபாண்டியனின் பெயரால் சுந்தர பாண்டியன் சந்தி ஏற்படுத்தப்பட்டிருந்தமையை இக்கல்வெட்டு புலப்படுத்துகிறது. இச்சந்திக்காக வேண்டி சிற்றூருடையான் சோறனுய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன் ஆனையூருக்குட்பட்டிருந்த நிலங்களின் ஒரு பகுதியை ஊரிலிருந்து பிரித்து தென்னவன் சிற்றூர் என்னும் பெயரால் திருத்தங்கல் கோயிலுக்கு வழங்கியிருப்பதாகக் கருதலாம். | | |

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப நாமருவிய கலை மடந்தையுஞ் செயமடந்தையுந
2. லஞ் சிறப்பக் கொளார்ந்த சினப்புலியுங் கொடுஞ்சிலையுஞ் குலைந் தொளிப்ப வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக் கயல்கள் விளையா
3. ட விருங்கடலி வலையத்தினிதறம் பெருகி கருங்கலி கடிந்து செங்கோனடப்ப ஒரு குடைக்கீழ் இரு நிலங்குளிர
4. மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க நால்வகை வேதமும் நவின்றுடன் வைவகை வேழ்வியுஞ் செயவினிதியற்ற (வறுவகை)
5. ச் சமையமு மழகுடன் திகழ எழுவகைப் பாடலுமிய லுடன் பரவ யெண்டிசையளவுஞ் சக்கரஞ் செல்லக் கொங்கணர் கலிங்கர் கோசலர் [மாளுவர்சிங்]
6. களர் தெலிங்கர் சீனர் குச்சலர் வில்லவர் மாகதர் விக்கலர் செம்பியர் பல்லவர் முதலிய பார்த்திப ரெல்லாம் உறைவிட மருளென ஒருவர் முன்னொருவர் மு(றைமுறை)
7. கடவதந்திறை கொணர்ந்து இறைஞ்ச விலங்கொலி மணிமுடி யிந்திரன் பூட்டிய பொலன்கதிரார மார்பினிற் பொலியப் பனிமலர்த் தாமரை திசை முகன்
8. படைத்த மனுநெறி தழைப்ப மணிமுடி சூடிப் பொன்னிசூழ் நாட்டிற் புலியாணை போய கலக்கன்னி சூழ் நாட்டுக் கயலா
9. ணை கைவளர வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித் தஞ்சையுமுறந்தையுஞ் செந்தழல் கொழுத்திக் காவியுநீலமும் நின்று கவின் நி

10. ழப்ப வாவியும் யாறும் மணிநீர் கண்ணழித்து கூடமுமாமதிலுங் கோபுரமு மாடரங் குமாடமு மாளிகையு மண்டபமும் பல விடித்துத் தொழுது வந்தடையாத நிருபர் தந் தோ (கையர் அழுதக)

11. ண்ணீர் ஆறுபரப்பி கழுதை கொண்டுழுது கவடி வித்துச் செம்பியனைச் சினமிரியப் பொருது சுரம்புக வோட்டியும் பொன்முடி பறித்துப் பாணனுக்குக் குடுத்துப் பாடருஞ்சிறப்பி

12. ற் பருதிவான் தோயு மாடகப் புரிசை யாயிரத்தளியிற் சேரர் வளவனபிஷேக மண்டபத்து வீராபிஷேகஞ் செய்து புகழ் விரித்து நாளும் பரராசர் நாமந் தலை விடுத்து மிழுந்தறுகண் மதசரயானை

13. மேல்கொண்டு நீராழி வையமுழுதும் அடைத்து பொது வழித்த கூராழியுஞ் செய்யத் தோளுமெய்கொண்டு பொய்யடையப் படாத வருமறை தேரந்தணர் வாழ் தெய்வப் புலியூர் திருவெல்லையிற் புக்குப் பொ.

14. ன்னம்பலம் பொலிய வாடுவார் பூவையுடன் மன்னும் திருமேனி கண்டு கண்டு மனங்களித்துக் கோலமலர் மேலயனுங் குளிர் துழாய் மாலுமறியா மலற்சேவடி வணங்கி வா.

15. ங்கு மேற்சிறை அன்னம் துயிலொழிய வண்டெடும் பூங்கமல வாவி சூழ் பொன்னமரா பதியிலொத்துல கங்தாங்கு முயர்மா மேருவை குணர்ந்து வைத்தனைய சோதி மணிமண்.

16. டபத்திருந்து சோலைமலி பழனச் சோணாடு தானிழந்து மாலை முடியுந்தரவருக வென்றழைப்ப வான்நிலை குலைய வாளகிரிக் கப்புறத்துப் போனவளவன் உரிமையொடும் புகுந்து

17. பெற்ற புதல்வனை நின் பேரென்று முன்காட்டி வெற்றியடி யினைக் கீழ்விழுந்து தொழுதிரப்பத் தானோடி முன்னிழந்த தன்மை யெல்லாம்.

18. கையகலத் தானேதகம் பண்ணி தண்டார் முடியுடனே விட்ட புகலிடந்தன் மார்வேளைக்குத் திரியவிட்ட படிக்கென்று மிது பிடி பாடாக வென் ெபாங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தொழ.

19. விளங்கும் செங்கயல் கொண்டூன்றுந் திருமுகமும் பண்டிழந்த சோழபதி யென்னும் நாமமும் தொண்ணகர் மீளவழங்கி விடை கொடுத்து விட்டருளி வாகைக் கதிர்வேல் வடவேந்தர்.

20. தம்பாதம் மேகத் தழையணிய வீரக்கழலணிந்து விளங்கிய மணியணி வீரஸிம்மாசனத்து விளங்கெழுக வரியிடு மருங்கசைப்ப கடலென முழங்குங் களிநல்யானை வடபுல வேந்தர்தம்

21. மணிப்புயம் பிரியா இலங்கிழை அரிவையர் தொழுது நின்றேத்து முலகமுழுதுடையாளொடும் வீற்றிருந்தளிய ஸ்ரீ கோமாற பன்மரான திருவுவன சக்ரவத்திகள் சோணாடு வழங்கியருளிய

22. சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு ஏழாவது நாள்தொன்னூற் றெட்டினால் மதுரோதைய வளநாட்டு மாடக்குளக்கீழ் மதுரை கோயிற் பள்ளியறைப் பீடத்துப் பள்ளிப் பீடமழவரா [யனில்]

23. எழுந்தருளியிருந்து கருநிலக்குடி நாட்டுத் தேவதானம் திருத்தங்கால் திருமலை மேனின்றருளின பரமஸ்வாமிகள் கோயில் ஸ்ரீ வை ஷ்ணவர்களும் நம்பு செய்வானுஞ் செய்யத் திருவாய் மொழிந்

24. ....................... சந்திக்குத் திருப்படி மாற்றுள்ளிட்ட வேண்டு நிவந்தங்களுக்கு சிற்றூருடையான் சோறனுய்ய நின்றாடுவானான குருகுலத் தரையனிந் நம்மானையூர் ஊரார் விலைகொண்ட

25. பெரியகுளத்துக்கு விலை யோலைப்படி கீழெல்லை பாடிகாப் பானையூர் நாடாழ்வான் குடியிருப்பான கீழைத்திறத்துக்கு காத்தான் சேரி கருஞ் செய் மேல் வரம் (புக்குத்)

26. தெற்குத்தென் னெல்லை பட்டன் பணி செயப்பாதை வரம்புக்கும் மலைக்குடிக்கிழவன் பெரிய செய்த் தலைவார்களுக்குங் குறங்குப்பாதையொடு செய்த தென் வரம்புக்கு வடக்கும் மேலெல்லை பத்திக்குறிச்சிக்கு தென்.

27. னெல்லைக்கும் அடங்கழிக்கீ ழெல்லைக்கும் ஆய்க்குடிக் கீழெல்லைக்குங் கிழக்கும் வடவெல்லை கல்லியேரிக்குளத்து நீர்க்கோவைக்குங் குமிழங்குளத்து வடவெல்லைக்கும் தெற்கும் ஆக இந்நான் [கெல்லைக்குட்பட்ட]

28. நீர்நிலம் நஞ்செய்யும் புன்செய்யும் தோட்டமுந் நத்தமும் மற்றும் எப்பேற்பட்டன முட்பட ஊரிற்பிறித்து வேறு முதலாக்கி தென்னவன் சிற்றூர் என்னும் பியரிலிவனுக்குமிவன் வர்க்கத்தாற்குங் காணியாக யேழாவது

29. முதலந்தராயமும் வினியோகமும் வெட்டிப்பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரஹப் பேறும் மற்றுமெப்பேற்பட்டனவு முட்படத் தேவதான இறையிலியாய் இருப்பதாக இடம்பெற வேணு மெ

30. ன்று சொன்ன மையில் இப்பரம ஸவாமி களுக்குச் சுந்தரபாண்டியன் சந்திக்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டு நிவந்தங்களுக்குச் சிற்றூருடையான் சோறனுய்ய நின்றாடு வானான குருகுலத்த ரையன்...

31. ......... கொண்ட இவ்வூர் பெரியகுளம் விலையோலைப் படி நான் கெல்லைக்குட்பட்ட நி லம் ஊறிற்பிரித்து வேறு முதலாக்கித் தென்னவன் சிற்றூர் என்னும் பேரால் இவனுக்குமிவன் வர்க்கத்த

32. ......... காரியமும் வினியோகமும் வெட்டிப்பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்கிரகப்பேறு ம ற்றுமெப்பேற்பட்டனவுமுட்பட தேவதான இறையிலியாய் யிருப்பதாக இட்டுவரியிலார் எழுத்திட்டு உள்வரியும் நம்மோலையுந்தரச் சொன்னோ

33.ம் கைக்கொண்டு திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டு நிவந்தங்கள் செல்லப்பண்ணுக என்று இப்படிச் சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டுவித்துக் கொள்கவெ

34. ன்றிருவாய் மொழிந்தருளினார் இவை வட செம்பில் நாட்டு மேலங்குடி கிழவனான இராசேந்திர விழுப்பரையன் எழுத்து. இவை மிழலைக் கூற்றத்துக் கீழ்க்கூற்று வெட்சி யூரான மும்முடிச் சோழநல்லூர்

35.பெட்டகனூருடையான் வெண்காடு தேவன் திருக்காரோண முடையானான குலசேகர மாதவ ராயனெழுத்து இவை மிழலைக் கூற்றத்துக் கீழ்க்கூற்று விளத்தூரான் செயங்கொண்ட சோழநல்லூர் விளக்குடி யூருடையான்

36. ஸ்ரீவல்லவன் சுந்தரத் தோளுடையானான அதிகையான் எழுத்து இவை மதுரோதைய வளநாட்டுக் காளையிருக்கை உழக்குடி ராயனுடையானான கேரளராயனெழுத்து இவை மதுரோ (தைய) வளநாட்டு

37. ப்புறப்பறனை நாட்டுப் புத்தூருடையான் பொன்னனுபகாரியான செயதரப் பல்லவரையனெழுத்து இவை கீழ்வெம்ப நாட்டுத் தச்சனூர் மண்டை யாழ்வான் கதிச்சமுடையானான சேய்திராயனெழுத்து.

38. இவை திருமல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூரு டையானான சோறனுய்ய நின்றாடுவானான குருகுலத்தரையனெழுத்து இவை அண்டநாட்டுப் பெருமணலூர் மந்திரியிரா மனான பல்ல

39. வராயனெழுத்து.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 244/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 12 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : கி.பி.1227 |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 554 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் கிரந்தம் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | எண் | : 23 |
| இடம் | : | அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் மகாமண்டபம் கிழக்குச் சுவர் தென்பாதி. | | |

குறிப்புரை : சுந்தரபாண்டியனின் அமைச்சராக இருந்த குருகுலத் தரையன் என்பவன் இந்நின்ற நாராயணப் பெருமாள் கோயில் கருவறை அர்த்தமண்டபம் மகாமண்டபம் ஆகியவற்றைக் கற்றளித் திருப்பணியாக்கி மன்னன் பெயரால் சுந்தரபாண்டியன் சந்தி நடக்க ஆனையூரில் தென்னவன் சிற்றூரைத் தானமாக வழங்கியதைத் தெரிவிக்கின்றது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இக்கோயில் கர்ப்பக்ருஹமும் திருவர்த்தமண்டபமும் மஹாமண்டபமு
2. முதலாக உபான ஸ்தூபி பரியந்தமாகச்சிலை செய்தானும் சுந்தரபாண்டியன் ஸந்திக்கு
3. இவன் தன்காணியானை யூரான தென்னவன் சிற்றூர் கடமை வரியிலிவிடுத்தானுந் திருமல்லி நாட்டுத்த
4. டங் கண்ணிச் சிற்றூருடையான் சோறனுய்ய நின்றோடு வானான குருகுலத்தரையன்
5. இவனுக்குச் ஸம்மானம் புறப்பட்டருளின விடங்களிலும் ஸ....ஜபங்.... ங் குருகுலத்
6. தரயன் தம்பிரான் சுந்தரனென்று நமக்குக் காளமூதுக வென்று நின்ற நாராயணர்தி
7. ருவுள்ள மானார் சந்திரன் மாமரபிலே வருபுரூரவர்ச் செய்ததிந்த
8. திகழ் கோயிலைத் தங்கால் நின்ற நாராயணற்குச் சுந்தரபாண்டிய தேவற் கீராறாண்டில் கூர்வயிர் நெடுஞ்
9. சிலையாற்றெழில் பெறச் செய்வித்தானிந்திர மாலரைப் புயவன் சோறனுய்ய நின்றான் உதயஞ்சி
10. ற்றைப் பதிக்கதிபன் மல்லிவளநாடன் கொந்தலருமாரெழில் புடைசூழ் தடங்கண்ணிக் கதிபன் கெ
11. ாண்டல் குருகுலத்தரையன் கொற்றவன் மந்திரி யோடுஞ் சுந்தரபாண்டிய தேவற்குத் திரு நதி
12. வாண்டோரெழிற்றிகழ் திருத்தங்காலூரானற் றிருமலை மேல் நின்றருளின நாரணற்கொரு சந்திக் கானையூர்

13. வரியிலிடுவித்துத் தேராந்திருநாளு மெழுந்தருளப் பண்ணித் திசையெட்டுந் திருவாழி இட்டு வித்தான்

14. சேறிந்த தாராழிக் காவலெனேய்...வென்று ெ.. வரை மார்பன் சோறனுய்ய நின்றாடுவான் தடங்கண்

15. ணிக் குருகுலக் கோன் கச்சியர்க் கன்று தன்னாணையில் ரசவாளவாது வொழித்த வீங்கொலி ஞாலஞ் சென்றுபு

16. ன லேற்ற செம்பியன் முதலான தொகையவர் கச்ச காற்குவளமுனை...யிசை மேம்பட்ட வசை தீர் கொள்கை சுந்தர

17. பாண்டியனடு வருதியின்ன கோயிலே முறமாயிருந்த பதினொரு நூற்று நாற்பத்தொன்பதிற் தங்கால் நின்ற தாமரைத் தடங்கண்

18. மாமணி விளங்க மேலது மாமணி மண்டபஞ் சுமந்தது சுதியாயிரங் கொடுமுடி மணியூர்க் கீழ து கருப்பப் பேழை

19. க் கல்லடையாக மேலது மாமணி மண்டபமாக இடையது தாமரைக் கிழவன் தானமாகப் புடையது நாலிருதிசையு நாசியாக வாலிதினிதமைத்தனன்

20. மாதோர் சோலைப் பாளை வாய்திறந்த வாளிளந் தென்றலூதை யோடு சன்மப் போதவிழ் நிலச் சாயல் நெடுஞ்சுடர் பவளக்கால் வளர்கன

21. ங் கொடி துடக்கு மேலைப்புயல் வாலெயிறு கிழித்த மின்னூற்றுயர் வருஞ் சிற்றூற் பெரும் பதி கிழவன் பொற்றேர் வையக

22. ம் புரக்கு முய்ய நின்றாடி குருகுலத் தரசனென்ப விரி புகழ்ந்தீய வேட்கையானே பா

23. ணா ணூா நம் பண்ணிக்கத்தர....

24. கூாஞூஃநவ்ஊணூவஸிகூஸா

25. ஹாயஸ்ய ஶ்ரீரங்கநா

## த.நா.அ. தொல்லியல்துறை   தொடர் எண் : 245/2005

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : |
| மொழி | : | வடமொழி | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | கிரந்தம் | | |
| அரசு | : | - | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | - | எண் | : 24 |
| இடம் | : | அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் மகாமண்டபம் கிழக்குச் சுவர் வெளிப்புறச் சுவர். | | |
| குறிப்புரை | : | ஸ்ரீ தனம் வழங்கப்பட்டதைக் குறிக்கும் கல்வெட்டாகத் தோன்றுகிறது. | | |

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஜூரி க்ஷேத்ரம் வஜெ .... ஜீ ஜ ஸூ ஞ் வ்ரஹு உவீ்ரஹிநத கருஞு ஸ்ரீஸாஜேயவாவுணு ஒவதி நாஉ ஸ்ரீ தன லெபெவஸசந்த்ர

2. கககாரு லெஸரு ஸிவகரு உாயிவாழ வார்தி ... யாஉ வரண ஸ்ரீஸிக்ஷஸீஉா

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 246/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 22 + 1 |
| வட்டம் | : | சிவகாசி | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | திருத்தங்கல் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 555 / 1922 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியன் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | ஸ்ரீவல்லபன் | எண் | : 25 |
| இடம் | : | நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில் மகாமண்டபம் கிழக்குச் சுவர் வெளிப்புறம் வடபகுதி | | |

1. *ஸ்வஸ்திஸ்ரீ ஶகாஙூ* ஆயிரத்து இருநூற்று நாற்பத்து நாலின்மேல் ஸ்ரீ கோச்சடைய பன்மரான *திரிபுவன சக்ரவர்த்தி*கள் ஸ்ரீ பராக்ரம பாண்டிய தேவர்கு யாண்டு *அ* மீன நாயற்று *உ௰அ* தீயும் பௌர்ணையும் புதன்கிழமையும் பெற்ற சித்திரை நாள் ஆரிநாட்டு *ஸ்ரீஜெயம் ஸ்ரீ* . . . . . . .மங்கலமான தனியாணை வீர பாண்டியச் சதுர்வேதி மங்கலத்து *ஊஹாஸபைெயோம்* ஆண்மர் நாட்டுச் சோழபுரத்து உடையார் விக்ரம பாண்டி*யீ*சுவரமுடைய நாயனார் கோயில் ஆதி சண்டே*ஸ்வர*ர்க்கு காணிவிலை *ப்ர*மாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது நாமும் ஆண்மர் நாட்டு அறுகைக் குன்றத்தூர் பெருமாள் அகப் பரிவார முதலிகளில் சூரிய தேவன் தம்பிக்கு நல்ல பெருமாளான பிள்ளை சுந்தரபாண்டிய வாணகோவரையற்கு காரா[ண்] மைச் சென்மமாகவும் இன் னாயனாற்கு வாடா

2. க் கடமையாகவும் விற்றுக் குடுத்த குளமும் புரவுமாவது எங்களூர் தென்பிடாகை சக்கரனேரிக்குப் பெருநான் கெல்லையாவது கீழ் எல்லை ஸ்ரீ வல்லவ *ப*நேரி ஆக வெம்பில் நாட்டு நெல்லு விதைத்து நாங்கள் கடமை கொண்டு போந்தப் பெரு வரம்பிற்கு மேற்கும் தென் னெல்லை வாகைக் குளத்துக்கு வடவெல்லைக்கு நாட்டின திருவாழிக் கல்லுக்கும் வண்ணனேரி வடவெல்லைக்கும் வடக்கு மேலெல்லை அப்பனேரி கோதைக்குழி கீழெல்லைக்கு கிழக்கு வடவெல்லை சகரனேரியில் வடலாகப் போந்த கொல்லைக்கும் ஸ்ரீவல்லவ னேரிக்கு நீர் போந்த ஆற்றுக்கும் தெற்கு ஆக இன்னான் கெல்லைக்குட்பட்ட குளமும் குளப்பரிப்பும் னஞ்சையும் நத்தமும் நத்தப்பாழும் மரங்களும் கிணறுகளும் தோட்டமும் தோட்டக் கொல்லைகளும் காடும் மனைகளும் மீன்படு பள்ள

3. மும் தேன்படு பொதும்பும் சுடுகாடும் மேட்டுத் துறையும் புற்றுத் தெற்றியும் மற்று மெற்பேட்பட்ட *ஸஊஸ்வப்ராஷ்தி*களும் விற்று விலை *ப்ரமாணஉ* பண்ணிக் குடுத்தோம். *ஊஹாஸபை*யோம்

உடையார் விழ உ பாண்டீஸ்வர முடைய நாயினார் கோயிலில் ஆதி சண்டேஸ்வரர்க்குத் தம்பிக்கு நல்ல பெருமாளின் பிள்ளை சுந்தரபாண்டிய வாண கோவரையர்க்கு காராண்மை சென்மமாகவும் இந்நாயனார்க்கு எப்பேற்பட்ட ஸஉஷவ ாவதிகளிலும் வ ா ட ா க் க ட ை ம ஆண்டொன்றுக்கு காரும் பாசனமும் உட்பட குடுப்பதாக இராசி பாசன குளிகை அறு... இக் கடமையாக யிறுத்துப் போதுவாராகவும் இப்படியிறுத்துக் குடுத்த சகரனேரிக்கு பேராற்றில் நின்றும் நீர் பாய்கிற தென்கொம்பில் காலும் வடகொம்பில் காலும் நீர் பாய்வதாகவும் ஆக இப்படி வித்துக் குடுத்த இக்குள

4. த்தில் ஸஉஷவ ாவதிகளுக்கும் எம்மிலிசைந்த விலை நிச்சயித்த இராசிபாசன குளிகைப் பணம் ருள இப்பணம் ஐந்நூறும் கையிலே பற்றிக் கொண்டு பெருநான்கெல்லை களிலும் திருச்சூலத் தாபனம் பண்ணி விலைக்குற விற்று பொருளற கொண்டு விற்று விலை வ ரணஉ பண்ணிக் குடுத்தோம். மஹாஸபையோம இப்படி விற்றுக் குடுத்த இந்தச் சகரனேரிக்குப் பெருநான் கெல்லையிலும் திருச்சூல ஸ்தாபனம் பண்ணிக் குடுத்தமைக்கும் கடமை வினியோகம் மற்று மேற்பேற்பட்ட இனத்துக்கும் தவிர்த்து ஆதிசண்டஸ்ரர்க்கு திருக்கை மலரிலே நீர் வார்த்துக் குடுத்தமைக்கு விற்று விலை வ ரணஉ பண்ணிக் குடுத்தோம் மஹாஸபையோம் இப்படி விற்றுக் குடுத்த இந்தச் சகரநேரி எங்களூரினின்றும் வரியில் பிரிந்து ஆண்மர் நாட்டுச் சோழபுரத்து உடையார் விழஉபாண்டீஸ்வ ரமுடைய.

5. நயினார்க்கு தேவதானத் தோடே கூட்டிக் கொள்வார்களாகவும் இப்படிக்கு திருவாய்த்திருமுகமும் கொண்டு சநி திதவற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்வதாகவும் இப்படி ஸம்மதித்து விலை வ ரணஉ பண்ணிக் குடுத்தோம் உஹாஸபையோம் உடையார் விக்ரமபாண்டீஸ்வர முடைய நாயனார் கோயில் ஆதிசண்டஸ்ரர்க்கு ஆரியூர் யஜ்ந மூர்த்தி எழுத்துஇவை.... நபத்தண்டராமன் பண்ணையாராஞ்சி ஆழ்வான் எழுத்து. இவை பெருவாயூர் உமையாழ்வான் தேவர்கள் தேவன் எழுத்து இவை ஸாலை வட பெருங்கோயில் ஸ்ரீராகவன் ஸ ஹஷதி

6. சோமயாஜியார் எழுத்து இவை பெரும நல்லூர் இராமபிரான் சங்கேந்தனான ஏத்து நாராயணன் எழுத்து இவை பசலையான் எழுத்து இவை பெருவரியூர் யஜ்நமூர்த்தி ஜ ா த வே த ன் எழுத்து இவை சாத்தனூர் வீற்றிருந்தான் எழுத்து இவை பசலை ஸ்ரீ கூஷ்ண ன் ர ா க வ ன் எழுத்து இவை.... சி நாராயணன் எழுத்து இவை பெருவரியூர் ஸ்ரீ கூஷ்ண ன் எ ழு த் து திருக்கடவூர் சாத்தனூர் சிங்கத்தழகன் உமையாழ்வான் எழுத்து இவை பசலை திருமாலிருஞ்சோலை நின்ற நாராயணன் எழுத்து இவை பெருவரியூர் உமையாழ்வான் எழுத்து இவை பெருவரியூர் ஸ்ரீ கூஷ்ணன் திருமாலிருஞ்சோலை நின்ற நாராயணன் எழுத்து இவை வங்கபுறத்து ஸ்ரீ

7. நரஸிஂஹன் எழுத்து இவை இறைவர் நறையூர் அழகன் எழுத்து அருளிச் செயல்படி இந்தக் காராண்மை விலை வ ரணஉ எழுதிநேன் ஸபை கணக்கன் வடபெருங் கோயிலு டையான் எழுத்து இந்த ஸிலாலெவஉபண்ணினேன் இந்நாட்டு சிப்பாசிரியன் சம்பந்தன் அப்பனான வீரவினோத ஆசாரியன் இ வ ஸாஉஉ இட்டு செய்வித்தேனும்இவன் வீர வினோத ஆசாரியன் எழுத்து.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 324/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 7 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 488 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | கோனேரின்மை கொண்டான் | எண் | : 16 |
| இடம் | : | அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் வடபுறத் திருச்சுற்று மாளிகைப் பட்டி. | | |
| குறிப்புரை | : | பாண்டிய மன்னனின் அம்மான் தொண்டைமானார் ஆன்மர் நாட்டிலுள்ள உத்தமசோழபுரத்திலிருக்கும் விக்கிரமபாண்டீசுவரமுடைய நாயனாருக்குக் குடிநீங்கா தேவதானமாக நிலம் வழங்கியுள்ளார். இக்கொடையை மன்னர் உறுதி செய்துள்ளார். | | |

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் கோனேரின்மை கொண்டான் ஆண்மர் நாட்டு சோழபுரத்து உடையார் விக்ரம பாண்டீஸ்வரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இவ்வூர் நான்கெல்லைக்குட்பட்ட பற்றில் உத்தமசோழ விண்ணக ரெம் பெருமானார் திருவிடையாட்டம் தானத் தாரோம் [விகரம பாண்டிய] சதுர்வேதி மங்கலத்துக்கு கடமை பழைய கல்வெட்டின் படி..... நத்தமும்..... ஸ்ரீவைஷ்ணவர்களும் பெருமாள் திருவிருப் பும்பும்.

2. திருவீதியுமாய் அநுபவித்துப் போந்த திருவிடையாட்ட மாய் உள்ள பற்றும் எங்களூர் நத்தத்தில் இந் நாயினார் திருவிடையாட்டமாய் உள்ள பற்றும் அரச நாராயணன் பெருந்தெருவுக்கும் இத் தோட்டக் கொல்லைக்கு நான்கெல்லையிலும் நாட்டின திருவாழிக் கல்லுமுட்பட்ட நத்தமும் தோட்டமும் பல நாமமான தேவதானத் திருவிடை யாட்டமும் தன்மதான இறையிலிகளும் நீக்கி நின்ற பற்றில் இவ்வெம் பெருமானார்க்கும் திருவிடை யாட்டமாகக் குடுத்த இவ்வூர்ப் பற்றில் விக்ரம பாண்டிஸ்வரமுடை.

3. யநாயனார் எழுந்தருளியிருந்த மேலைத் திருவீதிக்குத் தெற்கில் அகப்பரிவாரத்தாரில் மாலை என்கிறவன் மனைக்கு மேற்கு நாட்டின கல்லுக்கு கிழக்கும் இதன் செவ்வைக்கு மேற்கும் கீழைத் திருவீதியாகவும் தெற்குத் திருவீதிக்கு கண்ணுடைய பெருந்தெருவில் ஆண்டபிள்ளை மனைக்கு வடக்கு நாட்டின கல்லுக்கு கீழை மேல் போன செவ்வைக்கு வடக்கு மடமும் மனையும் நீக்கிக் குடுத்த நத்தமும் நீக்கிநின்ற நத்தமும் நத்தப் பாளுந் தோட்டமும் தோட்டக் கொல்லைகளும் குளமும் குளப்பரிப்பும் காடும் நன்செயும் புன்செயும் மரமும் கிணறும் தானப்பற்றும்

4. மற்று மேப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் உடையார் விக்ரமபாண்டீஸ்வரமுடைய நாயனாற்கு அம்மான் தொண்டைமானார் கோயிலில் ஏழாவது பங்குனி மாதம் முதல் குடி நீங்கா தேவதான மாகத் தந்து இப்பற்று பசானம் சிறு கொடையான பயிர் புன்பயிர் மற்றும் தான் வேண்டும் பயிர் பார்த்துக் கொள்ள இத்தால் வரும் கடமை வினியோகம் அந்தராயம் வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி சந்திவிக்கிரப் பேறு வாசல் வினியோகம் காரியவாராட்சி இலாஞ்சினை பேறு நந்தப் பச்சை பிள்ளையார் நோன்பித் தேவை ஆனைச்சாலை குதிரைப் பந்தி....

5. கால் தேவை வீட்டுத் தேவை புற உடல் பொ[ன்வரி] இனவரி ஆள்வரி மனைவரி தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் பாசிப்பாட்டம் மற்றும் மெப்பேற்பட்ட அனைத்து உபாதிகளும் உட்பட இந்நாள் முதல் தேவதான இறையிலியாக தந்து வரியிலார் கணக்கிலும் கழிக்கச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு வேண்டுமிடங்களில் திருசூலத்தாபனமும் பண்ணிக் கொண்டு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க இவை திருவரம்பூருடையான் எழுத்து இவை வீரபாண்டிய பல்லவராயன் எழுத்து...நாள் ஆயிரத்து நூற்று அறுப... இந்த சிலா சாசனம் எழுதினேன். நாயனான வீரவினோத ஆசாரியனேன்

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 325/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 13 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : சகம் 1483 கி.பி.1561 |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 483 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | தென்காசிப்பாண்டியர் ஊர்க்கல்வெட்டு | | |
| அரசன் | : | குலசேகரன் | எண் | : 17 |
| இடம் | : | அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் அர்த்தமண்டபம் வடக்குச் சுவர் (ஜகதிக் கல்வெட்டு) | | |
| குறிப்புரை | : | அழகன் பெருமாள் அதிவீரராமனின் ஆணைப்படி மதுரையிலுள்ள திருவாலவாயுடையார் கோயிலில் மாடாபத்தியமாக இருந்துவந்த ஊருடைய முதலியான வீரபாண்டி சூடிக்கொடுத்த முதலி என்பவர் வீரபாண்டீசுவர முடையார் கோயிலில் சீபண்டாரக் கணக்காகப் பணிபுரிந்துள்ளார். இவருக்கு ஆன்மர் நாட்டு சோலைசேரி முடிவிளங்கு பாண்டிய குளப்பற்றில் காணியாட்சியாக ஒரு மா நிலமும் வழங்கப்பட்டுள்ளது. | | |

**கல்வெட்டு :**

1. ஸ்ரீமந் மஹாமண்டலேசுவரன் ஹரிராயவிபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் பாண்டிய மண்டல ஸ்தாபனாசாரியன் சோடமண்டலப் பிரதிஷ்டாபனாசாரியன் சாஸனம் ஸர்வஜ்ஞன் ஸங்கீதஸாஹித்ய வித்யா சதுரன் ஸகலாதிபதி ஸுசாஅயநன் மேற் செல்லா நின்ற நங்கூராமந தன்மைப் பெருமாள் குலசேகர தேவற்கு

2. யாண்டு ௰௩ஆவது துன்மதி௵த்து உக்ஷிணாயநத்து வஷபுஜதுங்கஹிரவி ௰௯ தேய்தியும் ஸகூ வக்ஷத்து உஸரியும் வ்ருஹஸ்பதி வாரமும் ஸுகந்த யோமமும் ஷஹ காரணமும் பெற்ற உத்திராடத்து நாள் நங்கூராமந தநுஉப் பெருமாள் குலசேகர ஷேவற் நநராந

3. அழகன் பெருமாள் அதிவீரராமன் நம்மாலயத்தில் தானிகர் கணக்கற்கு ஓலைவரக் காட்டுகையில் மதுரை உதைய வளநாட்டு மாடைக் குளத்தின்கீழ் மதுரையில் திருவால வாயுடையார் கோயிலில் மாடா பத்தியம் ஊருடைய முதலியான் வீரபாண்டி.

4. சூடிக் கொடுத்த முதலிக்கு நம்மாலயத்துச் சீபாண்டாரக் கணக்குக் காணியாட்சையாகக் கொடுத்த நிலம் ஒரு மாவுக்கு ஆண்மரை நாட்டு சோலை சேரி முடிவிளங்கும் பாண்டியன் குளப்பற்றில் நிலம் ஒருமா இந்நிலம் ஒருமாவும் மாதம்ஒன்றுக்கு இரண்டு.

5. கோட்டை நெல்லும் இரண்டு பணம் நாள் ஒன்றுக்கு இருநாழி சோறும் மற்றும் அசல் கணக்குக் கொத்த சுதந்திரங்களும் பற்றிக் கொண்டு இன்னாள் முதலுக்கு சந்திராதித்தவரை ஸந்ததி ப்ர வேசமாக செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கையாண்டு கொள்ளவும் ஸ்ரீமந் மஹாமண்டலேசுவரன் எழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 326/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 24 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : சகம் 1509 - கி.பி. 1587 |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 484 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | |
| அரசு | : | தென்காசிப் பாண்டியர் ஊர்க்கல்வெட்டு | | |
| அரசன் | : | அதிவீரராமனான ஸ்ரீவல்லபன் | எண் | : 18 |
| இடம் | : | அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் கருவறை வடக்கு மற்றும் மேற்கில் உள்ளது. | | |
| குறிப்புரை | : | முற்றுப் பெறாத கல்வெட்டு. கிரந்த எழுத்தில் தொடங்கும் இக்கல்வெட்டு மன்னன் பெயர் மற்றும் ஆண்டு கூறுவதுடன் நின்றுவிடுகின்றது. | | |

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஶ்ரீமந் ஜெயெபு வைதுதெ ஜொகூ நெசானகுாண ஸ ஹாம காரணை பாவஸநம் பா .....

2.விக்ஷபாண்டி ஶ்ரீம ஸ காரணை பகாலூ தருா ம மேல்ச் சொல்லா நின்ற நஂகூசாரந

3. பெருமாள் அதிவீரராமந ஆன சிவல தேவருக்கு ஆண்டு உயசவது சவசி ஷவது உ ....

4.த்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 327/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 36 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1303 - 04 |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 490 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : 19 |
| அரசன் | : | குலசேகர தேவன் | | |
| இடம் | : | அருள்மிகு விக்கிரம பாண்டீசுவர முடையார் திருக்கோயில் இரண்டாம் கோபுரம் [உள்கோபுரம்] தெற்கு கிழக்கில் உள்ளது. | | |
| குறிப்புரை | : | சோழபுரத்திலுள்ள விக்கிரமபாண்டிய ஈசுவரமுடையார் கோயில் திருப்பணிக்காக வேண்டி சோழபுரம் முடிவழங்கு பாண்டியன் குன்றத்தூர் இரண்டு சொல்லாதான் சேதுராமக் குறிச்சி சாமாந்த கண்டன் வீரசிங்க நல்லூர் பாண்டிய தேவ குறிச்சி போன்ற பல ஊர்களைச் சேர்ந்த ஊரும் காரணவரும் தாங்கள் விற்கின்ற புடவையுரு வொன்றுக்கு காணிப்பணம் அளிக்க இசைந்ததைத் தெரிவிக்கிறது. | | |

**கல்வெட்டு**

1. *ஸ்வஸ்திஸ்ரீ* கோமாற பன்மரான *திரிபுவன சக்ரவர்த்தி*கள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு ௩௰௬வது மார்கழி மாதம் ஆண்மர் நாட்டு சோழபுரத்து உடையார் விகரமபாண்டி*ஸ்வர*முடைய நாயனார் கோயில் திருப்பணிக்கு இவ்வூர் கண்ணுடைப் பெ

2. ருந் தெருவுள்ளிட்ட ஊரும் காரணவரோமும் முடிவழங்கு பாண்டியனில் ஊரும் காரணவ ரோமும் முழுதுமாய்க் குடியுள்ளிட்ட ஊரும் காரணவோமும் குன்றத்தூர் இரண்டு சொல்லாதான் சேதுராமக் குறிச்சி சாமந் தாண்டான் வீரசிங்க நல்லூர் பாண்டிய தேவகுறிச்சி இவ்வூர்களில் ஊரும் காரணவ

3. ரோமும் எம்மிலிசைந்து இந் நாயனார்க்கு நாங்கள் விக்கும் புடவையுருவொன்றுக்கு காணிப்பணமாக வைத்து புறவூர்களிலே நின்று வந்து விக்கும் மவர்களும் இப்பணம் குடுப்பதாகச் சம்மதித்து இது *சந்த்ராதித்தவ* செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் குடுத்தோம் இவ்வூரர்.

4. னை வரோமும் காணியரோமும் உடையார் விக்ரமபாண்டி ஸவரமுடைய நாயனாற்கு இவை வழுதிகோன் எழுத்து இவை பாண்டிக் கோன் எழுத்து இவை அளகைக் கோன் எழுத்து இவை வளவக்கோன் எழுத்து இவை சுந்தர செண்டிலை ராமன் எழுத்து இவை தமிழ்கோன் எழுத்து இவை தென்னவகோன் எழுத்து இவை விக்கிரம பாண்டிய மாராயன் எழுத்து இவை காழி ஞானசம்பந்தன் எழுத்து இவை திரி புவன சிங்கதேவன் எழுத்து.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 328/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 2 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : சகம் 1495 கி.பி.1573 |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 482 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ், கிரந்தம் | | |
| அரசு | : | தென்காசிப் பாண்டியர் ஊர்க்கல்வெட்டு | | |
| அரசன் | : | குலசேகரன் என்ற பராக்கிரம பாண்டியன் | எண் | : 20 |

| | | |
|---|---|---|
| இடம் | : | அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் கருவறை வடக்குச் சுவர்ப் பகுதி |
| குறிப்புரை | : | விக்கிரம பாண்டீசுவரமுடையார் திருக்கோயிலில் மாடாபத்தியமாக ஆரிய நாட்டிலிருந்த வாசுதேவ நல்லூர் சிந்தாமணி நாதன் கோயில் கைக்கோளரில் பட்டர் அழகர் என்பவர் நியமிக்கப்பட்டு அவருக்கு மாடாபத்தியக் கணக்கு காணியாட்சியாக 2 மா நிலம் வழங்கப்பட்டிருந்தமையைத் தெரிவிக்கிறது. |

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்வஸ்த்யஸ்து ஜெயாப்யுதய சாலிவாகந சகாப்தம் ஆயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றஞ்சு சேல்லாநின்ற ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் .....

2.ஸ்ரீமத் ஸமஸ்த ஸகல புவனசக்ரவர்த்தி ஸ்ரீ ஸுந்தரபாண்டிய ஸகலலோக சூசாகூய

3.ருன் மேல் செல்லா நின்ற ஸ்வஸ்திஸ்ரீ குலசேகரப் பெருமாளான பராக்கிரம மாறற் அழ

4.கிய சொக்கனாற்கு யாண்டு உவது ஸ்ரீமுக ஸம்வத்ஸரத்து தக்ஷிணாயநத்து வருஷ

5.த்து விருச்சிக மாதத்து சாந்தியதியும் சுக்கில பக்ஷத்து தசமியும் ஆதிவார

6. ஸித்தயோகமும் நாகரிகரணமும் பெற்ற உத்தரத்து நாள் ஸ்வஸ்திஸ்ரீ பரா

7. க்ரம மாறன் அழகிய சொக்கனார் நம்மாலயத்தில் தானிகர் கணக்கர் ஓலை வரக்காட்டு

8. கையில் ஆரியனாட்டு வாசுதேவ நல்லூரில் சிந்தாமணி நாதன் கோயில்

9. கைக் கோளரில் பட்டர் அழகனுக்கு நம்மாலையத்தில் மாடா பத்தியமும் மாடா

10. பத்தியக் கணக்கு காணியாட்சையாகக் குடுத்த நிலம் இரண்டு மாவுககு ஆண்மர் நாட்

11. டு சோலை சேரிப் பற்றில் முடி விளங்கும்பாண்டியன் குளப்பற்றில் நிலம் ஒரு மாவு

12. ம் இன்னிலம் ஒரு மாவும் மாதம் ஒன்றுக்கு நாலு கோட்டை நெல்லும் நாலு பணத்துக்

13. கும் இரண்டு கோட்டை நெல்லும் இரண்டு பணமும் நாள் ஒன்றுக்கு நானாழி சோற்றுக்கு இ

14. ரு நாழி சோறும் மற்றும் அசல் தாணிகர் கணக்கருக் கோசர சுவந்திரங்களும் பற்றிக் கொ

15.ண்டு இன்னாள் முதலுக்கு ஆசந்திராதித்தவர் சந்ததிப் ப்ரவேசம் செலையிலுஞ் செம்பிலு

16. ம் வெட்டிக் கையாண்டு கொள்ளவும் ஆதிசண்டேஸ்வரர் எழுத்து.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 329/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 3 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : 21 (உதிரிக்கல்வெட்டு) |
| அரசன் | : | குலசேகரன் | | |
| இடம் | : | அருள்மிகு விக்கிரம பாண்டீசுவரர் திருக்கோயில் நந்திமண்டபம் நிலவறை உள் உள்ளது. | | |
| குறிப்புரை | : | துண்டுக்கல் வெட்டாக உள்ளது. முதற்கல்வெட்டில் குலசேகர பாண்டியன் மூன்றாம் ஆட்சியாண்டில் வழங்கப்பட்ட தானம் தெரிகின்றது. இவ்விறைவர் தீர்த்தவாரிக்காக எழுந்தருளும் போது நடந்த செய்தியினைத் தெரிவிக்கின்றது. இதுபோன்ற செய்திகளை பிறதுண்டுக் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. | | |

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செயல் சோழபுரத்து உடையார் வி.....
2. று.. சி மாகேசுவரர்க்கு நயினார் குலசேகர தேவற்கு மூன்றாவது....
3. ரையிலே தீர்த்தம் பிரசாதிக்க கடவதாக திருநாள் எழு.....
4. மற்றுமுள்ளிட்ட பல அழிவுகளுக்கும் சேந்தமங்கலத்தில் கு.....

நிலவறைமேல் கல்லில் காணப்படும் துண்டுக்கல்வெட்டு

1..... [யா] ண்டு முதலுக்கும் உடலாக சகர நாட்டு ஆ....

2.... டி கலால் ஐஞ்சாவது பங்குனி மாதவரையும்

3. .....ர உடை புன்பயிர் தறியிறை தட்டொலி தட்.....

தென்மேற்கு மூலை அதிட்டானம் முப்படைக் குமுதம்

1. ..... நாட்டு சோழபுரத்து விக்ரம பாண்டீசுஸ்வரத்து நாய [னார்]....

2........புறமும் சுந்தரபாண்டிய தெருவோமும் திசை....

3..... பிள்ளையார்க்கு அமுது படிக்கு பரவோ பயிர் விளை....

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 330/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 38 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 498 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | குலசேகரன் | எண் | : 22 |

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் நுழைவுவாயிலின்மேல் நெற்றியில் உள்ள கல்வெட்டு.

குறிப்புரை : செவ்விருக்கை நாட்டுக் களத்தாவூரைச் சேர்ந்த வீரன் கோலங் கரியானான வேணாவுடையான் என்பவன் இக்கோயிலில் அந்தராள மண்டபம் சோபான மண்டபம் செய்தளித்ததைக் குறிப்பிடுகின்றது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ குலசேகரதேவற்கு யாண்டு௩௰௮ வது ஆனி மாஸம் செவ்விருக்கை நாட்டுக் களத்தாவூரான ஒன்னலாதித்த நல்லூர் களத்தாவூருடையா

2. ன் வீரன் கோலங்கரியானான வேணாவுடையார் உத்தம சோழ விண்ணகர் ஆழ்வார் கோயில் அத்தமண்டபத்துக்கு கிழக்கு பெருமாளும் மன்னனாரும் எழுந்தரு

3. ளியிருக்கிற அந்தராள மண்டபமுந் திருமுன்பு மஹாமண்டபமும் சோபானமும் இவர் செய்வித்த தர்மம் ஸ்வஸ்திஸ்ரீ

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 331/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 6 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : கி.பி.1258 |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 494 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | வீரபாண்டியன் | எண் | : 23 |

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் இடதுபுறம் உள்ளது.

குறிப்புரை : உத்தமசோழ விண்ணகரெம்பெருமான் கோயில் ஸ்ரீபண்டாரிகள் உத்தமசோழச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த திருவெழுந்தூர் நாராயணன் நாராயண பட்டன் என்பவரிடமிருந்து அச்சினை(பணத்தை)ப் பெற்று கற்தச்சனிடம் கொடுத்து சேர நாராயணன் திருமண்டபத்தில் உடையார் களப்பாளர் செய்வித்த முன் மண்டபத்திருப்பணிக்கு வழங்கியமையைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய
2. தே வற்கு யாண்டு சுவது ஆண்மர் நாட்டு உத்தம சோழ விண்ணக ரெம்பெருமா
3. ன் கோயில் ஸ்ரீ பண்டாரிகளோம் உத்தமசோழ சதுர் வேதி மங்கலத்து திருவெ
4. ழுந்தூர் நாராயணன் நாராயண ஹட்டன் பக்கல் சேர நாராயணன் திருமண்டபத்தி
5. ல் உடையார் களப்பாளர் செய்வித்த முன்மண்டபத்திற்கு இவன் பக்கல் வாங்கிகற்தச்ச
6. ற்கு குடுத்த அச்சு க இவ்வச் சொன்றுக்கும் இவ்வாட் டைக் காத்திகை மாஸமுதல்வருஷாதிதவ
7. வது ஸ்ரீபண்டாரத்திலே ஒடுக்கி சந்திராதித்த வரை செலுத்துவோமானமைக்கு இக்கோயி
8. லிலனு ஸந்தானம் திருவெழுந்தூர் அழகிய மணவாளதாஸன்னெழுத்து இக்கோயில் நம்பிமாரில்
9. பண்டாருத்தன் யாதவனான அழகிய மணவாள ஹட்ட னெழுத்து இப்படிக்கு இவை நாராயணன்
10. வீற்றிருந்தானான ஹட்டனெழுத்து.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 332/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 5 + 1 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : கி.பி.1288 |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 495 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | விக்கிரமன் (மாறவர்மன்) | எண் | : 24 |
| இடம் | : | அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் இடதுபுறம் உள்ளது. | | |
| குறிப்புரை | : | இறைவனுக்குரிய திருவிடையாட்ட பிரம்மதேயமாக விளங்கிய உத்தம சோழச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த திருநல்லூருக்குரியவரான நாராயணன் நாராயண பட்டர் என்பவர் கோயிலில் திருநந்தா விளக்கு மற்றும் சந்தியா தீபம் எரிப்பதற்காக வேண்டி $8^1/_2$ அச்சு [பணம்] வழங்கியுள்ள மையைத் தெரிவிக்கிறது. | | |

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீவிக்ரம பாண்டிய தேவற்கு
2. ஸ்ரீ ருவதின் எதிராமாண்டைப்பசி மாஸத்து முதற்றியதி ஆண்மர் நாட்டு உத்தம சோ
3. ழ விண்ணகரரெம் பெருமாள் திருவடி பிடிக்கும் பாண்டவ தூதனியாதவனான
4. அழகிய மணவாள பட்டனும் நாராயணன் வீற்றிருந்தான் பட்டனும் நாய
5. னார் திருவிடையாட்ட ப்ரஹ்மதேயம் உத்தமசோழ சதுர்வேதி மங்கலத்து நல்லூர்
6. ர் நாராயணன் நாராயண பட்டன் பக்கல் நாயனாற்கு திருநந்தா விளக்கொன்றும் செ
7. லுத்துவோமாகக் கைக் கொண்ட அச்சு ஏழரையும் ஸந்த்யாதீபமொன்று
8. க்கு கொண்ட அச்சு ஒன்றுமாக அச்சு அஜி இவ்வச்சு எட்டரையும் கைக்கொண்
9. டு இ நாள் முதல் சந்திராதித்தவற் பொலியூட்டாக செலுத்து வோமா
10. ன மைக்கு இவை பாண்டவற்தூ தனியாதவனான அழகிய மணவாள பட்டன் எழுத்து இவை
11. வ நாராயணன் வீற்றிருந்தான் ஒட்டன் எழுத்து இவ் வாட்டை இத்தியதி இந்நாயனா
12. ர் சி பண்டாரிகளோம் இத்திருநல்லூர் நாராயணன் நாராயண பட்டன் பக்கல் இ

13. ந் நாயனாற்கு இவ்விளக்கு மூன்றும் வெள்ளிக்கிழமை தோறும் தேங்கா யொன்றும் அமுது செய்விப்போமா

14. க கைக் கொண்டு இநாயனாற்கு ஸ்ரீசுதர்ஸனமும் ஸ்ரீ பாஞ்ச சந்யமும் செய்து சாத்தினெ

15. பான்னினாலச்சு க இவ்வச்சு ஒன்றுக்குஞ்ச சந்திராதித்தவற் சி பண்டாரத்திலே ஒரு தேங்காயும் மு

[பூச்சுக்குள் மறைந்துள்ளது]

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 333/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 15 + 1 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 496 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | கோனேரின்மை கொண்டான் | எண் | : 25 |

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வலதுபுறம் உள்ளது.

குறிப்புரை : ஆன்மார் நாட்டு உத்தமசோழ விண்ணகர் ஆழ்வார் கோயில் ஸ்ரீவைணவர்களுக்கு தேவதான பிரம்மதேயமாக பெரிய ஜீயரும் இளைய ஜீயரும் வழங்கிய நிலங்களிலிருந்து பிராட்டியாருக்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் செலவினங்களைச் செய்ய வழிவகை செய்யப்பட்டிருந்தமையைப் புலப்படுத்துகிறது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ

2. கோனேரின்மை கொண்டான் ஆண்மர் நாட்டு உத்தமசோழவிண்ணகர் ஆழ்வார் கோயிலில் ஸ்ரீ வைஷ்ணவர்

3. களுக்கு தேவதானப் பிரமதேயமாக பெரிய சீயரும் இளைய சீயரும் தந்தருளி திருவாய் கேழ்வி

4. த் திருமுகமும் புரவரியாருள்வரியும் திருச்சூலக்கல்லுள்ளிட்ட தேவதானங்களில் இறுத்து வருகிற அந்தராயமு

5. ம் விநியோகம் எழுந்தருளிவிச்சு பிராட்டிக்கும் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டுவனவுக்கு பெற வேணுமென்

6. று இவன் நமக்குச் சொன்னமையில் இவளுக்காக அந்தராயம் பதினைஞ்சாவதினெதிரமாண்டு முதல் தந்தோம் முன்பு

7. இறுக்கக் கடவ வண்ணக்க கூலி தரவு கூலி உட்பட அந்தராயமும் மற்றும் எப்பேர்ப்பட்டனவும் பதினைஞ்சா

8. வதினெதிராமாண்டு முதல்கைக் கொண்டு அமுதுபடி உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்கள் செல்லப் பண்ணுக இவை

9. வ செழியதரையனெழுத்து யாண்டு பதினைஞ் சாவதினெதி ராமாண்டு நாள் பன்னிரண்டினால் இவை உய்ய வ

10. ந்த பெருமாளெழுத்து ஸ்வஸ்திஸ்ரீ

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 4 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | ஸ்ரீவல்லபன் | எண் | : 26 |

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வலப்புறம் உள்ளது (வடகிழக்கு)

குறிப்புரை : மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில் இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் விண்ணகர் எம்பெருமாளுக்கு மன்னன் பெயராலும் சபையார் பெயராலும் விடப்பட்ட குளங்கள் மற்றும் நிலத்தானங்கள் பற்றிய செய்தியினைத் தெரிவிக்கின்றது. ஏரிகளின் பெயர்களாக கொண்டனேரி சுவரனேரி போன்றனவும் தென்பிடான் குளம் ஊர்க்குளம் போன்ற குளங்களின் பெயர்களும் வாய்க்கால்களின் பெயர்களும் இவற்றின் நான்கு எல்லைப் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமடந்தையுஞ் செயமடந்தையுந் திருப்பு
2. யங்களிலினிதிருப்ப இருநிலமும் பெருமையே
3. யாக எண்டிசையுங் குடை நிழற்ற மன்னவரெ
4. ரல்லாம் வந்திறைஞ்ச மரபில் வந்த மணிமுடி சூடித் தென் குமரியும் வடகெங்கையுந்
5. திரைகடலே யெல்லையாகப் பார் முழுவதுங் கயலாணை பரந்து செங்கோலுட
6. ன் வளர் மன்னிய வீரஸிംஹாஸனத்து உலகமுழுதுடையாளோடும் வீற்றிருந்த
7. ருளிய.. மாமு...ல் மதிக்குலம் விளக்கிய கோமுதற் கோச்சடைய பன்மரான திரிபு
8. வனச் சக்கரவத்திகள் ஸ்ரீவல்லப தேவற்குயாண்டு நாலாவது நம் பிள்ளையார்.
9.ஸ்ரீ ஸுந்தரபாண்டியதேவர் ஆண்மர் நாட்டு அறுகைக் குன்றத்தூரில் எழுந்தருளியி
10. ருக்க கோயிலுள்ளாலை பள்ளியறைக் கூடத்துப் பள்ளிக் கட்டிலிலெழுந்த
11. ருளியிருந்து இந்நாட்டு சுந்தரபாண்டிய விண்ணகராழ்வார் தேவதான ப்ரஹ்மதேயம்
12. ஸ்ரீ சுந்தரபாண்டியச் சதுர்வேதி மங்கலத்து ஸபையார் செய்யத் திருவாய் மொழிந்தருளி
13. னபடி நம் பக்கல் தங்களுக்கு தேவதான ப்ரஹ்மதேயமாக தந்த குளங்களுக்கு எல்லை
14. வெண்பைக்குடி நாட்டு துடையனூர் முட்டத்து திருச்சலூர்க்கு அமண பு

15. த்தூர்க்கும் கொண்டய னேரிக்கும் கீழெல்லை காணி யாற்றில் தாழ்வேய் தெற்கு நோ

16. க்கிப் போந்த சுவரனேரி மேல் கடை கொம்பிலே ஏறிமேற்கு நோக்கிப் போந்த கவர் வா

17. ய்க்காலில் ஏறி பரப்பை வலத்து வைத்து இடத்தே மேற்கு நோக்கிப் போந்து சி வில்லி

18.புத்தூர்ப் பெருவழியே வடகிழக்கு நோக்கிப் போந்து கவர்வாய்க்காலை ஏறி வடக்கு நோ

19. க்கிப் போந்து இவற்றை வலத்து வைச்சு சண்டிக்கும் திருச்சலூர்க்கும் நடுவில்நாரா

20. சப் பெருவரம்பே வடக்கு நோக்கிப் போந்து முழிக்கரை யிலே ஏறிக்கரையே மேற்கு

21. நோக்கி திருச்சலூர்ப் புறகரையே போந்து மேல் கடைக்கொம்பிலே ஏறி இக்குளத்து

22. க்கு நீர்பாய்கிற காலை இறங்கி வடக்கு நோக்கி உள்வாய்க்கே போந்து இக்குளத்துது

23. டக்கடைக் கொம்பே ஏறிப்ப... யவலத்து வைச்சு வடமேற்கு நோக்கி போந்து

24. அமண் புத்தூர் மேல்கடைக் கொம்பிலே... வடக்கு நோக்கிப் போய்க்குளத்து நா...வக

25. ா யேரிக்கு கிழக்கு நோக்கிப் போய் தென்பிடாரன் குளத்துத் தென் கொம்பை ஏறிக்கிழக்கு நோக்கிப் பே

26. பாய் முழிரேய் வலத்து வைச்சு இடத்தே போய்... கொண்டனேரி நீர் வரக்கேய் தென்கிழக்கு

27. நோக்கிப் போந்து உசாத்திலே ஏறி நீர் குளத்து நீர் நக்கலே மேற்கு நோக்கிப் போய் காணி பற்

28. றிலே வந்து இந்நான் கெல்லைக் குள்ப்பட்ட குளங்களும் நிலமும் நத்தமும் நத்தப்பாழும்

29. இந்நாட்டு உபனயன மங்கலத்து எல்லை வேல்க் குளத்து நீர் நக்கலே தெற்கு

30. நோக்கிப் போந்து சமையப் பிராட்டி நீர் நக்கலே.... து மேல் கொ

31. ம்பில் பற்றி மேற்கு நோக்கிப் போந்து வழியே வட மேற்கு நோக்கியே வந்து உபநயன

32. மங்கலத்து மேல் கொம்பிலே ஏறிமேற்கு நோக்கிப் போந்து இக்குளத்து நீர் பாக்கி

33. ய வடக்கு நோக்கிப் போய் தாழ்வை ஏறி இத்தாழ்வை ஏறி இத்தாழ்வை வலத்து வைத்து இடத்தே கிழக்கு

34. நோக்கிப் போய் வேலங்குளத்து நீர் நக்கலே வந்து இந்நான்கெல்லைக் குள்பட்ட குளமும்

35. நிலம் நத்தமும் நத்தப்பாழும் ஆன்மர் நாட்டு வெள்ளி யறை நல்லூரான தனம்பராயன்

[தொடர்ச்சி பூச்சுக்குள் மறைந்துள்ளது]

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 7 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : - |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 496 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : 27 |
| அரசன் | : | - | | |

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வடபுறச் சுவர்ப் பகுதி.

குறிப்புரை : இக்கோயில் பண்டாரிகள் மற்றும் சபையார் பக்கல் கொடுக்கப்பட்ட நிலத்தானம் பற்றிய செய்தியினை த்தருகின்றது. இவற்றால் வந்த கடமை அந்தராயம் முதலியன இரண்டு சந்தியாதீபம் எரிக்கவும் நித்திய பூசை முதலியவற்றிற்குமாகச் செலவிடப் பணிக்கப்பட்டது. இந்நிலத்தானத்தின் நான்கெல்லைகள் சுந்தபாண்டியன் கோலால் அளக்கப்பட்ட செய்தியும் தெரிகின்றது.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான..... [யா]

2. ண்டு ஏழாவது ஆண்மர் நாட்டுச் சோ [ழபுரம்]

3. கோயில்ஸ்ரீ பண்டாரிகளோம் மாஸ....

4. ச் சானி தனக்கு னோவாய் ... இந் நோவு

5. இரண்டுக்கும் இரண்டு சந்தியா தீபஞ் ெ.....

6.......... பொன் கொண்டு.....

7. ப் பேரேரிக்கு கீழெல்லை இக்குளத்துக்கு கீழ்க் கொம்பிலே போந்து னேரியிலே ஏறி தெற்கு நோக்கிப் போந்து நிதித்ரூ

8. துக்கு கீழை வாய்காலே தெற்கு நோக்கிப் போந்து ஆற்றில் இறங்கி இவ்வாறே வடக்கு நோக்கிப் போந்து துழாய் குடிக்கு

9. நீர் பாய்கிற சுருளி அணையிலே வந்து இவ்வாறே போய் துழாய் குடிக்கும் குளத்துக்கும் நீர் பாய்கிற அணையிலும் சென்று இக்கா

10. லே கிழக்கு நோக்கிப் போந்து இக்குளத்துள் வாயில் கரையிலே ஏறி இக்குளத்து உள் வாயிலே போய் இக்குளத்துக் கடைக் கொம்

11. பிலே வந்த இந் நான்கெல்லைக்குட்பட்ட குளமும் நிலமும் நத்தமும் நத்தப்பாழும் ஆக இவஞ்சு குளமும் ஒரூரொருவும் [நீ]

12. க்கி முன்னுடையூரும் பழம் பேரும் தவிர்த்து பதினாறு பேர் [க்] கு தேவதான ஸர்வமாந்யமாக

இவ்வாண்டு முதல் தந்தோம் வீரபாண்டிய

13. ன் கோலால் நிலமொரு மாவுக்கு முதல் வீரபாண்டியந் நில மாத்தால் நாற்கல நெல்லும் கால் காசும் இவ்வாழ்வார்[க்] குத் திருப்பபடிமா

14. ற்றுள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு இறுத்து அனுபவிப்பதாகக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்க வென்று தி

15. ருவாய் மொழிந்தருளினார் இப்படிக்கு இவை வெரிச்சி யூருடையானெழுத்து ஸ்வஸ்திஸ்ரீ

## த.நா.அ. தொல்லியல்துறை   தொடர் எண் : 336/2005

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : | 13 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : | |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 497 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு எண் | : | 28 |
| அரசன் | : | கோனேரின்மை கொண்டான் | | | |

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் வடபுறச்சுவர்

குறிப்புரை : இவ்வூர்ச் சபையார் இவ்விறைவர்க்கு விட்ட தேவதானச் செய்தியினைத் தெரிவிக்கின்றது. இத்தேவதான நிலமும் தன்மநாராயணப் பேரேரி கொண்டயனேரி முதலிய ஏரிகளும் குளங்களும் தானமாக வழங்கப்பட்டன. இவற்றின் நிர்வாகம் இருபது நபர்களுக்கு கொடுக்கப்பட்டு நிருவகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தானம் நடைபெறாதிருந்ததை மன்னனின் பெயரனின் காலத்தில் பெயர் மாற்றி உத்தமசோழச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் மாற்றித் தேவதானமாக விடப்பட்டது என்ற செய்தி வருகின்றது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவத்திகள் கோனேரின்மை கொண்

2. டான் சோழபுரத்து உத்தம சோழ விண்ணகர் ஆழ்வார் தேவதானம் உத்தம சோழச் சதுர்வேதி மங்கலத்து ஸபையோம்....

3. க்கு இவ்வாழ்வார் தேவதானம் ஆண்மர் நாட்டு வெள்ளி யறை நல்லூரான தன்மராயனப் பேரேரியும் துடையனூர் முட்டத்

4. து திருச்சேலூரும் அமண் புத்தூரும் கொண்டயனேரியும் உபநயன மங்கலமும் பெரிய அப்பாட்டக்காலிலும் நூறு

5. கிழக்கு காணியாத்துக்கு இரு..... படின படிக்குள்வரி புரவரி யானைவரியும் அந்தராயம் அப்பாட்டக்கு தினமும் பெற்று சுந்தரபாண்டிய

6. ச் சதுர் வேதி மங்கல மென்று அனுபவிச்சுப் போந்து பின்பு ஸ்ரீசமுகாஸாயையுமிக்குத் தங்கள் குடிபோனமையில் இக்கு

7. ளங்கள் பாழாய் பக்கல் யெழுந்து நடந்து திருவாரா தனமும் முட்டிக் கிடந்தமையில் பேரனார் உத்தம சோழ

8. ச் சதுர் வேதி மங்கல மென்று இருபது பேர்க்கு கிரயம் எழுதியவிடத்தும் குளங்களும் கல்லுவித்து நிலமும் காடு வெ

9. ட்டிக் கைக் கொண்டனுபவித்து வந்ததாக இப்படிக்கு நாம் மோனரயம் பேர் வேணுமென்று விரத முடித்த பெருமாள் சொல்லுகையி

10. ல் இப்படி தேவதான மாகத் தரச் சொன்னோம் இக்குளங்களு முள்ளிட்ட... பேரு மிவ்வள் ஆழ்வார்க்கு பண்டாண்டு பழநடை கடமை

11. இறுத்து அனுபவிக்க இவை மளவராயன் எழுத்து இவை வயனாட்டராயனெழுத்து இவை பல்லவராய னெழுத்து யாண்டு

12. பதின் மூன்றாவது நாள் ஆயிரத்தொரு நூற்றொருபத் தொன்பதினால் ஆசாரஞ் செய்தருளித்து ஸ்வஸ்திஸ்ரீ

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 337/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 25 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : - |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 502 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | குலசேகரன் | எண் | : 29 |

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் முன்மண்டபம் இடதுபுறம் (தெற்கில்) உள்ளது.

குறிப்புரை : ஆண்மா் நாட்டு சோழபுரத்து உத்தமசோழ விண்ணகா் ஆழ்வார் கோயிலில் எழுந்தருளிவிக்கப்பட்டிருந்த மன்னார் மற்றும் நாச்சியார் திருமேனிகளுக்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட நித்த நிவந்தங்களின் செலவினங் களுக்காக இறையிலியாக நிலக்கொடை வழங்கப்பட்டிருந்தமையைத் தெரிவிப்பதாகக் காணப்படுகிறது.

**கல்வெட்டு :**

1. [அருளிச்செயல்] ஆண்மர் நாட்டு சோழபுரத்து உத்தம சோழ விண்ணகர்
2. [ஆழ்வார் கோயில்] நம்பிமார்க்கும் ஸ்ரீவைஷண வர் களுக்கும் இக்கோயிலிலி
3. [ல் எழுந்தரு] ளுவித்த மன்னனார்க்கும் நாச்சியார் [க்கும்] ஸ்ரீ கோமாறபன்மர
4. [ரனதி ஹுவ]னச் சக்கரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீகுல
5.[ சேகர தேவர்] க்கு யாண்டு உயரு வது சித்திரை மாஸம் முதல் அமுதுபடி சா
6.[ த்துப்படி உ] ள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு இவ்வூர் நம் உழ
7........ மங்கலத்தில் இவர்க்கு திருவிடையாட்ட இறையிலியாகக் குடு
8........ டிக் கோலால் நடுவில் கொட்டகாரத்துக்குத் தெற்கு வெண்
9......... இச் கொட்டக் காரத்துக்கு மேற்குச் சுமை தாங்கிக் கிணறு.
10.......... க் கிணறு இரண்டு உட்பட நிலம் ஒரு வேலி
11...........டு.........முடைய.....யிலே காராண்மை உடலாக தன்மதான
12........... க்க குடுத்தோம் இப்படி இவ்வோலை பிடி பாடாகக் கொண்டு.
13. கல்லுவிதாக நான்கெல்லையிலும் திருவாழிக்கல்லும் நாட்டி.
14. [கல்லிலும் செ] ம் பிலும் வெட்டிக் கொள்க இப்படிக்கு இவை முத்தூற்றுக் கூற்ற
15. த்து...... நான ஒலகளந்த சோழநல்லூர் அழகன் சொக்கனார் எழுத்து இை
16. [வ] ........ நாச்சியார் [எழு] த்த தாமோதிரன் துப்பனான் குலசேகர வி [முப்பரையன்]

17. [எழு] த்து இப்படிக்கு இவை ராசேந்திர சோழ வள நாட்டு... தாரங்குடை.

18...... லமுது தேவச்சிலையானான மீனவன் விழுப்பரையன் எழுத்து இப்ப

19. [டிக்கிவை] செம்பினாட்டு கீரனூரான் உய்யவந்தான் உய்யநின்றாடுவான் குருகுல

20. [ராயன் எ] ழுத்து இப்படிக்கு,இவை மிழலைக் கூற்றத்து நடுவில் கூற்று வி

21.......... ல்லூர் உடையான் யோகப் பெருமான் சொக்கனாரான

22............ ன் எழுத்து இப்படிக்கிவை கீழ்ச் செம்பி நாட்டு த.....

23. ....... யன் கலியனான காலிங்கரையன் எழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 338/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : 1868 |
| ஊர் | | சோழபுரம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : |
| மொழி | : | தமிழ் + ஆங்கிலம் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் + ஆங்கிலம் | | |
| அரசு | : | ஆங்கிலேயர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | | எண் | : 30 |

இடம் : சோழபுரம் விக்கிரம பாண்டீச் சுரமுடையார் கோயில் அலுகிலுள்ள பாலம்.

குறிப்புரை : பாலம் கல்வெட்டு இதனை அமைத்த பொறியாளரின் பெயரும் பணி செய்து முடிக்கப்பட்ட ஆண்டும் (கி.பி.1868) பொறிக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டு :**

1. இந்தப் பாலமும்
2. அதின் றோட்டும்
3. கவர்ண்மெண்டு சிலவு செய்து
4. சப் இஞ்சிணீர் மேஸ்தர்
5. மக்கனீர் துரையவர்களால்
6. சூ அள சாய அ
7. முடிப்பிவிக்கப்பட்டது.

ஆங்கிலம்

1. THIS BRIDGE
2. AND ITS APPROACHES WERE
3. CONSTRUCTED AT THE GOVERNMENT
4. EXPENSE UNDER SUPERINTENDENT
5. OF MED MANAGER SUB ENGINEER
6. IN THIS YEAR
7. 1868

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 34 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : கி.பி. 13 ஆம் நூ.ஆ. |
| ஊர் | | முதுகுடி | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 502 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | குலசேகரன் | எண் | : 1 |

இடம் : இராசபாளையத்திற்கு தெற்கேயுள்ள முதுகுடி என்ற சிற்றூரின் நடுவில் உள்ளது.

குறிப்புரை : இவ்வூரிலுள்ள கருங்குளம் என்ற பெரிய குளத்தில் உடைப்பு ஏற்பட்டபோது அவ்வுடைப்பை சரிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டு இறந்த குடும்பர் இனத்தவரான பெரியதேவ பள்ளன் என்பவருக்காக விடப்பட் உதிரப்பட்டி நிலம் பற்றிய செய்தியினைத் தெரிவிக்கிறது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. குலை சேகர தேவ
3. ர்க்கு யாண்டு ௩௪ வ
4. து கருங்குளத்திர்க்
5. கு ஒரு பழி உண்
6. டான படியாலே
7. இப்படிக்கு இவ்வூர்
8. குடும்பரில் பெரிய
9. தேவப் பள்ளன் அணை
10. வெட்டிப் போகையா
11. லே இவன் மகளுக்கு
12. ஊரார்களிட்ட உதி
13. ரப்பட்டி குடுத்தபடி தபான
14. வ நிலம் அரைமா அரை
15. நிலம் சந்திராதித்தவல்
16. மானிய மாயனுவப்பார்
17. களாக [ஸ்வஸ்திஸ்ரீ]

## த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண் : 340/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 6 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1297 |
| ஊர் | | இராசபாளையம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 503 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | ஸ்ரீவல்லபன் | எண் | : 1 |
| இடம் | : | பறவை அண்ணம் காத்தார் திருக்கோயில் தெற்குச் சுவர் | | |

குறிப்புரை : இடையிடையே சிதைந்து காணப்படுகின்றது. இக்கோயில் இறைவர்க்கு ஒரு நந்தாவிளக்கு முட்டாமல் எரிப்பதற்குத் தானம் வழங்கப்பட்டுள்ளது. அந் நந்தா விளக்கு எரிக்கத் தவறும் பட்சத்தில் இரண்டு நந்தாவிளக்கு எரிப்பதாகவும் தண்டமாக ஒரு பணமும் தரச் சம்மதித்த செய்தியினைத் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ வல்லஹ தேவற்கு யாண்டு ௬ வது மேஷ நாயற்று பூர்வ்வபக்ஷத்து ஏகாதசியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற உத்திராட்டாதி நாள் வடவெல்லைத் திருக்கை இ.............. வெண்பைக்குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசக நல்லூர் உடையார்.

2. கோயில் முப்பது வட்டத்தில் சிவ ப்ராஹ்மணரில் தேவப்பெரு மாளான.... காயனும்... தம்பிஸ்ரீ சாதவாசக பட்டனும்.... ஆண்டான் ஆட்கொண்ட...... ட் கொண்ட நாயக பட்டனும்.... சொக்கன் திருமலை வண்ண சொக்க பட்டனும்..... யான பரமேசுர பட்டனும் இவனை வோமும் பிடிபாடு கல்லில் வெட்டிக் குடத்த படியா.....

3. னாற்கு இடுவதாக திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு முப்பதுக்கு மாதமொன்றுக்கு ஒன்றரைக்கும் இந்நாள் முதல் சந்திராதித்தவரை.... விளக்கொன்றும் எரித்து போதுவோமாகவும் இத்திருநந்தாவிளக்கு பூ.....படி....னற்கு இரண்டு நந்தாவிளக்கு மெரித்து தண்டம் ஒரு பணமுங் குடுப்போ மாகவும் இப்படி சம்மதித்து பிடிபாடு க

4. ல் வெட்டிக் குடுத்தோம் பெரியாற்கு இவ்வனைவோமும் இவை.... எழுத்து.. இவை சாதவாசக பட்டன் எழுத்து இவை ஆரி நாட்டுத் தொண்டை நாயக பட்டன் எழு[த்து] இவை சொ [க்கன் எழுத்து]

இந்த தன்மரக்ஷிப்பாற்கு.... அவர்கள் சரணங்களிரண்டும் என் தலை மேலன.

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 341/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 11 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1248 |
| ஊர் | | இராசபாளையம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 504 / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | இரண்டாம் சுந்தரபாண்டியன் | எண் | : 2 |

இடம் : பறவை அண்ணம் காத்தார் திருக்கோயில் கிழக்குச் சுவர்

குறிப்புரை : மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில் எனக்கு நல்லபெருமாள் மடத்திற்கும் திருவாரூர் கோளகி மடத்து ஆசாரியர் அவர்கள் சிஷ்யர் மற்றும் அவர்கள் வர்க்கத் தாருக்கும் உணவு மற்றும் தேவைக்களுக்காக எனக்கு நல்லபெருமாள் பேரால் விடப்பட்ட நிலத்தானத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நிலத்தில் எப்பயிரும் விளைவித்துக் கொள்ளவும் அவற்றால் வந்த வரிமுதலானவைகளும் செலவிடப்பட வேண்டிய முறை பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமலர் திருவும் பொரு செய மடந்தையு தாமரைக் குவிமுலைச் சேர்ப்புயத் திருப்ப வேதநாவில் வெள்ளி தட்டாமரைக் காதல்மாது கவின் பெறத்திளை

2. ப்ப வெண்டிரையுடுத்த மண்டிணி தாக்கைத் திரு நிலமடந்தை யுரிமையிற் களிப்பச் சமையமு நிதியமுந் தருமமுந்த தழைப்ப யிமையவர் விழாக் கொடியிடந் தோறு மெடுப்பக் கரு [ங்கலி கனல்கெடக்]

3. [கடவுள் வேதிய] ரருந் தொழில் வேழ்விச் செங்கனல் வளரச் சுருதியுந் தமிழுஞ் சொல் வளங் குலவப் பொருதிறவாழி பூதலஞ் சூழ்தர ஒரு கை யிருசெவி மும்மத நாற் கோட்டயிராவத முதல்

4. செய்திக் கொற்றத் தெண்டிசை யானை யெருத்த மேறிக் கண்டநாடெ தெனக் கயல்களி கூரக் கோசலந் துளுவங் கொங்கிரங் குச்சரம் போசளமக

5. தம் பொப்பளம் புண்டரங் கலிங்கமீழ கடாரங் கௌடந் தெலிங்கஞ் சோனகஞ் சீனக முதலாய விதிமுறை திகழ வெவ்வேறு வகுத்த முதுநிலக்கிழமையில் முடிபுனை வே

6. ந்தற் கொருதனி நாகனென்று ல கேத்தத் திருமுடிசூடீச் செங்கோலோச்சிக் கொற்றத் தரளக் குளிர்குடை நிழற் கீழ்க் கற்றைக் கவரிகாவலர் வீச விடுகதிர் நவமணி வீரஸிஂஹாஸனத்துடன் முடி சூடி யுயர் குலத் திருவென்

7. மதுமலற் கரங்குவித்துப் பாத்திபர் [வர] மங்கையர் திரண்டு வணங்குஞ் சென்னியில்ச் சுடரொளி மௌலியிற் சுடர்மணி மேலிடச் சிவந்த இணைமலர் சீறடிக் கமல மதுகரங் கமலமென்றணுகும் உலகமுழுதுடை

8. [யாளொடும் வீற்றி] ருந்தருளிய மா முதல் மதிக்குலம் விளக்கிய கோமுதற் கோமாற பன்மரான

[தி_ஹுவ]னச் சக்கரவத்திகள் ஸ்ரீவஹுடிரபாண்டிய தேவற்கு யாண்டு பதினொன்று நாள் ஐந்நூற்றுத் தொண்ணூற்றினால்

9. மாடக் குளக்கீழ் மதுரைக் கோயில்ப் பள்ளியறைப் கூடத்து பள்ளிப் பீட மழவராயனில் எழுந்தருளியிருந்து வெண்பைக் குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசக நல்லூற் பாவனங் களி

10. ல் கீழைத் திருவாசலுக்குந் தென்கிழக்காக செய்வித்த எனக்கு நல்ல பெருமாள் மடத்து வதிக்கும் திருவாரூர் கூ_ஷ கோளகி மடத்து ஆசாரியர் ஶிஷ்ரில் ஈசான தேவரும் அவர் சந்தானத்துத் தபஸ

11. ரில்.... தருளினபடி இவற்கும் இவர் ஸந்தானத்து தபஸ்ரற்கும் ஹோஜனம் உள்ளிட்டு வேண்டுவனவுக்கு ராஜவல்லிபுரத்து ஒருவாறு உணர்ந்த எனக்கு நல்ல பெருமாளான தமிழ்ப்பல்லவரையர் பேரால் செய்வித்த

12... வெண்பைக் குடி நாட்டுக் கருங்குளமானச் சாதவாசக நல்லூர் மேபால் கருங்குளத்தில் காணியான மூன்றாங் கண்ணாற்று நாச்சி வாயக்கல் தடி ஒன்று நிலம் முக்காணி முந்

13. [திரிகை]... லும் இதன் கிழக்குத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரை யேயரைக்காலும் இதன் வடக்குத் தடி நாலு நிலம் காணியரைக் காணி கீழ்ரைக்காலும் ஆறாங் கண்ணாற்றுத் தடி ஒன்று நிலம்

14. [காணியரைக் காணிக்கீழ் முக்கா] லும் கங்கன் வாய்க்கல் தடி ஒன்று நிலம் முக்காணியரைக் காணி முந்திரிகைக் கீழேழுமா வரையும் ஆக நிலம் மூன்று மா முந்திரிகைக் கீழரையும் இவ்வூர் வடபால் ஆதியூற் குளத்தில் இரண்டாங்கண்ணாற்றுத் தேவன்

15...... ஒருமா முந்திரிகைக் கீழ் முக்காலே மாகாணி யும் மூன்றாங் கண்ணாற்று யாதவராயன் செய்க்கு வடகிழக்குத் தடி இரண்டு நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலும் இதன் மேற்குத் தடி இர

16. ண்டு மா முந்திரிகைக் கீழரைக்காலும் இதன் வடக்குத் தடி மூன்று நிலம் அரைக்காணிக் கீழரையே யரைக்காலும் புளி க்குக் கிழக்கு வயக்காலுக்குத் தெற்குத் தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் மாகா

17....... காணிக் கீழெழுமா வரையும் இவ்வூர் மேல்பால் புதுக்குளத்து முதற்கண்ணாற்று ஆணையாண்டான் தடிக்குத் தென்கிழக்குக் கருங்குளத்துக்கு நீர் பாய்கிற காலுக்குக் கிழக்கு செம்மோடி வாய்க்காலுக்கு மேற்கும் தடி பல

18. [விட்டு] ........ லும் ஆக நிலம் அரையும் கற்கயத்துப் பற்றி ஆற்றுக்குத் தெற்குத்தோட்ட நிலம் இரண்டு மாவும் ஆக நிலம் அரையே யிரண்டு மாவும் பதினோராவதின் எதிராமாண்டு முதல் முதல் மடப்புற யிறையலியாயிறுப்பதா கவும் இறுக்குமிடத்து

19......முதருதான அச்சும் காரியவராட்சியம் வெட்டிப்பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் வாசல் பேறும் இலாஞ்சினைப்பேறும் பொன்வரியும் மற்றும் எப்பேறப்பட்டனவும் உட்பட மாத்தால் காசு காலும் பயி

20... மாத்தால் இவ்வூற் கடமையிறுக்குங் காலால் நெல்லு அறுகலமும் குருவை விளைந்த நிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்று முக்காலும் அற்பசிக்கு குறுவை விளைந்த நிலத்துக்கு ஒன்று பாதியும் துலா

21. ..... ஒன்று காலும் எள் வரகு தினைப்புல்லு இறுங்கு விளைந்த நிலத்துக்கு மாத்தால்திரமம் இரண்டும் ஆக இவ்வாண்டு முதல் இறுப்பதாக இறைகட்டப்பெற வேணுமென்று ஐய்யன் மழவராயன் நமக்குச் சொன்னமையி

22. ........ரூர் கூ_ஷ மடத்து ஆசாரியர் சிஷ_ரில் எங்கள் தேவரும் இவர் ஸந்தானத்துத் தபஸ_ற்கும் ஹோஜன முள்ளிட்டு வேண்டு வனக்கு இராஜவல்லபுரத்து ஒருவாறுணர்ந்தான் எனக்கு நல்ல பெருமாளான த....

23....... க்கு வெண்பைக்குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசக நல்லூர் தேவன் பரசிராமனான பாண்டிய தேவனுக்குச் சாதவாசக நல்லூர் மேல பால் கருங்குளத்தில் காணியான மூன்றாங் கண்ணாற்று நாச்சான் வயக்கல்...

24.... ரரையே அரைக்காலும் இதன்கிழக்குத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரையே யரைக்காலும் இதன் (வகை) க்குத்தடி நாலு நிலம் காணியரைக் காணிக் கீழரைக் காலும் .....ங்... கண்ணாற்றுத்தடி ஒன்று நிலம்

25........ [வ]யக்கல் தடி ஒன்று நிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழேழுமாவரையும் ஆக நிலம் மூன்று மா முந்திரிகைக் கீழரையும் இவ்வூர் வடபால் ஆதியூர் குளத்தில் இரண்டாங் கண்ணாற்று தேவன் வய்க்கால்

26..... (கீ) ழ் முக்காலே மாகாணியும் மூன்றாங் கண்ணாற்று யாதவராயன் செய்க்கு வட கிழக்குத் தடி இரண்டு நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலும் இதன் மேற்குத் தடி இரண்டு நிலம் காணி அரைக்காணி முந்திரி கீழ்....

27...... ன்று நிலம் அரைக்காணிக் கிழரையே அரைக்காலும் புளிக்குக் கிழக்கு வாய்க்காலுக்குத் தெற்குத் தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் மாகாணியும் ஆக நிலம் இரண்டு மா அரைக்காணிக் கீழேழுமா....

28...... ளத்து முதற் கண்ணாற்று ஆனையான்டான் தடிக்குத் தென் கிழக்குக் கருங்குளத்துக்கு நீர் பாய்கிற காலுக்குக் கிழக்கும் செம்மோடி வாய்க்காலுக்கு மேற்கு தடி பல நிலம் நாலுமா முக்காணி கீழரைக் காலும்.....

29. ற்றுக்குத் தெற்குத் தோட்ட நிலம் இரண்டு மாவும் ஆக நிலம் அரையே இரண்டு மாவும் பதின் ஒருவதினெதிரா மாண்டு முதல் மடப்புற இறையிலியாக யிறுப்பதாகவும் இறுக்கு மிடத்துக் கடமை

30. [அந்தராயம்].... தருவதான அச்சும் காரிய வாராட்சியும் வெட்டிப் பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் வாசல் பேறும் இலாஞ்சினைப்பேறும் பொன்வரியும் மற்றும் எப்பேற்பட்டனவும் உட்பட மாத்தால் காசு

31. லத்துக்குக் கடமை மாத்தால் இவ்வூர்க் கடமையிறுக்குங் காலால் நெல்லு அறுகலமும் குறுவை விளைந்த நிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்று முக்காலும் அற்பசிக் குறுவை விளைந்த நில

32. .....த்து விளைந்த நிலத்துக்கு ஒன்றுகாலும் எள்வரகு தினைப்புல் இறுங்கு விளைந்த நிலத்துக்கு மாத்தால் திரமம் இரண்டும் ஆக இவ்வாண்டு முதல் இறுப்பதாக நம் வரியிலார் எழுத்திட்ட உள்வரியும் [நங்கேழ்வியும் குடு]

33. க்கச் சொன்னோம் கைக் கொண்டு இப்ப *வரு_ாதி*தவற் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டி வித்துக் கொள்க வென்று திருவாய் மொழிந்தருளினார் இவை திருமல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூருடையா

34. ன் சோறனுய்ய நின்றாடு வானான குருகுலத் தரையன் எழுத்து இவை செவ்விருக்கை நாட்டு [சக்கரபாணி] நல்லூர் அரையன் விரத முடித்தானான பல்லவரையனெழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 342/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 11 + 1 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1249 - 50 ஆம் ஆண்டு |
| ஊர் | | இராசபாளையம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 504 A / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | கோனேரின்மை கொண்டான் | எண் | : 3 |

இடம் : பறவை அண்ணங்காத்தார் திருக்கோயில் கிழக்குச் சுவர்ப்பகுதி

குறிப்புரை : இக்கல்வெட்டும் முன் சொன்னதைப்போல எனக்கு நல்லபெருமாள் பேரால் செய்வித்த நிலத்தானம்பற்றிக் குறிப்பிடுகின்றது. திருவாரூர் கிருஷ்ணகோளகி மடத்தில் உள்ள ஆசாரியர் சிஷ்யர் மற்றும் உள்ளிட்டார்க்கும் அவர்கள் வமிசத்தார்க்கும் இந்நிலம் பயன்படுத்திக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அந்நிலத்தில் பயிர் செய்யும் உரிமையும் மற்ற எல்லாவரிகளும் இத் தானத்திற்காகச் செலவிட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது.

## கல்வெட்டு

1. கோனேரின்மை கொண்டான் வெண்பைக் குடிநாட்டுக் கருங்குளமான சாதகவாசக நல்லூர் பூவனங்களில் ...... முடையாற் கோயிலிற்.... ழந் திருவாச லுக்குத் தென்கிழக்குள்க்.....

2........ ஒருவாறுணர்ந்தான் [எனக்கு நல்லபெரு]மாளான தமிழ்ப் பல்லவரையன் பேரால் செய்வித்த எனக்கு நல்ல பெருமாள் மடத்து வத்திக்கும் திருவாரூர் கூ‍ஷ்ணகோளகி மடத்து ஆசாரியர் [ஶிஷ்ரில்]

3. ஈசா [ன தேவரும் அவர்] ஸ ஞானத்து தபஸ்ற்கும் ஹோஜனம் உள்ளிட்டு வேண்டு வனவுக்கு இச் சாதவாசகநல்லூர் தேவன் பரசிராமனான பாண்டிய தேவனுக்கு இவ்வூரில் மேல்பால் கருங்குளத்தில் காணியான

4. வயக்கல் தடி ஒன்று நிலம் முக்காணி முந்திரிகைக் கீழரையே யரைக்காலும் இதன் கிழக்குத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரையே யரைக்காலும் இதன் வடக்குத் தடி நா

5. லு நிலம் [காணியரைக் காணி கீழரைக்]காலும் ஆறாங் கண்ணாற்றுத் தடி ஒன்று நிலம் காணியரைக் காணிக்கீழ் முக்கா [லும் கங்கன் வயக்கல்] தடி ஒன்று நிலம் முக்காணி யரைக் காணி முந்திரிகைக் கீழேழு

6. [மா வரையும் ஆக நிலம் மூன்று மா முந்திரிகைக் கீழரையும்] இவ்வூர் [வடபால் ஆதியூற்] குளத்தில் [இரண்டாங் கண்ணாற்றுத்] தேவன் ......................நிலம் ஒரு மா முந்திரிகைக் கீழ் முக்காலே மாகாணியும் மூன்றாங் கண் ணாற்று.

7.[யாதவராயன் செய்]க்கு வடகிழக்குத் [தடி இரண்டு நிலம்] அரைக் காணி முந்தி [ரிகைக்]

கீழரைக்காலும் இதன் வடகிழக்குத்தடி மூன்று

8..........லும் இதன் வடக்குத் தடி நாலு நிலங்காணி அரைக்காணிக் கீழரைக் காலும் ஆறாங் கண்ணாற்றுத் தடி ஒன்று நிலங்காணியரைக் காணிக் கீழ் முக்காலும் சிங்கள வயக் [கல்தடி ஒன்று நிலம்] முக்

9. காணி அரைக்காணி முந்திரிகைக் கீழேழுமாவ ரையும் ஆக நிலம் மூன்று மாமுந்திரிகைக் கீழரையும் இவ்வூர் வடபாலாதியூற் குளத்தில் இரண்டாங் கண்ணாற்று தேவன் வயக்கல் தடி [ஒன்று நிலம்]..............

10. ந்திரிகைக் கீழ் முக்காலே மாகாணியும் மூன்றாங் கண்ணாற்று யாதவராயன் செய்க்கு வடகிழக்குத்தடி இரண்டு நிலம் அரைக் காணி முந்திரிகைக் கீழ் முக்காலும்

11. இதன் மேற்குத் [தடி] இரண்டு நிலம் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரைக் காலும் இதன் வடகிழக்குத் தடி மூன்று நிலம் அரைக்காணிக் கீழரையே அரைக்காலும் பு [ளிக்]

12. க்குக் கிழக்கு வாய்க்காலுக்குத் தெற்குத்தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழ் மாகாணியும் ஆக நிலம் இரண்டு மாவரைக் காணிக்கீழேழு மாவரையும் இவ்வூர்....

13.த்து முதற் கண்ணாற்று ஆணையாண்டான் தடிக்குத் தென் கிழக்கு கருங்குளத்துக்கு நீர் பாய்கிற வாய்க்காலுக்குக் கிழக்கும் செம்மோடி வாய்க்காலுக்கு மேற்கு தடி பலவிட்டு நிலம் நாலுமா முக்காணிக் கீழரை [க் காலும்].........

14. யும் கற்கயத்துப்பற்றில் ஆற்றுக்குத் தெற்குத் தோட்ட நிலம் இரண்டு மாவும் ஆக நிலம் அரையே இரண்டுமாவும் பதினொன்றா வதினெதிரா மாண்டு முதல் மடப்புற இறையிலி [யிறுப்பதாகவு] மிறுக்

15. குமிடத்துக் கடமையுமந்த ராயமும் வினியோகமும் தருவதான அச்சுங்காரிய வாட்சியும் வெட்டிப் பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் வாசல் [பேறும்] இலாஞ்சினைப் பேறும் பொன் [வரியும்] மற்று மெப்

16. பேற்பட்டனவும் உட்பட மாத்தால் காசு காலும் பயிர் பாற்த்து விளைந்த நிலத்துக்குக் கடமை மாத்தால் இவ்வூர் கடமையிறுக்குங் காலால் நெல்லறு கலமும் குறுவை விளை[ந்த நிலத்துக்கு...]

17. சையால் ஒன்று முக்காலும் அற்பசிக் குறுவை விளைந்த நிலத்துக்கு ஒன்று பாதியும் துலா விறைத்து விளைந்த நிலத்துக்கு ஒன்று காலும் எள்வரகு தினைப் புல்லிருங்கு விளைந்த நிலத்துக்கு [மாத்தால்] திரமமிர

18.ண்டும் ஆக இவ்வாண்டு முதல் இறுப்பதாகவும் இட்ட வரியிலார் எழுத்திட்ட உள்வரியும் நங்கேழ்வியுங் குடுக்கச் சொன்னோம் கைக் கொண்டு இப்படி சநு_ாசிதூவற் செல்வதா [கக் கல்லிலுஞ் செம்பிலு]

19. ம் வெட்டிக் கொள்க இவை அரும் பொற் கூற்றத்து போக்குளத்துப் பூவான் ஆண்ட பிரான் அழகனான அழகிய பாண்டிய விழுப்பரையன் எழுத்து யாண்டு யிக... இவை...

20. ணன் கிரனூற் பொன் பற்றியுடையான் திருப்பூவன முடையான் சுந்தரபாண்டிய தேவனான சுந்தரபாண்டிய வில்லவரையன் எழுத்து இவை செவ்விருக்கை நாட்டுச் சக்கரபாணி [நல்லூர் அரையன்] வி

21. ரத முடித்தானான பல்லவராஜனெழுத்து

**த.நா.அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 343/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : | விருதுநகர் | ஆட்சி ஆண்டு | : 11 |
| வட்டம் | : | இராசபாளையம் | வரலாற்று ஆண்டு | : |
| ஊர் | | இராசபாளையம் | இந்தியக் கல்வெட்டு | |
| | | | ஆண்டு அறிக்கை | : 504 B / 1909 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : |
| எழுத்து | : | தமிழ் | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க்கல்வெட்டு | |
| அரசன் | : | - | எண் | : 4 |

இடம் : பறவை அண்ணங்காத்தார் திருக்கோயில் கிழக்குச் சுவர்ப்பகுதி

குறிப்புரை : முன் சொன்ன கல்வெட்டுத் தானத்தைத் தொடர ஆண்டு பதினொன்று முதல் ஆணையிடப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

**கல்வெட்டு :**

1. யாண்டு ௰க வது நாள் அந்தராய முட்பட்ட இறையிலி இட்டபடிக்கும் இறை கட்டினமைக்கு....[வெண்பைக்]

2. குடி நாட்டுக் கருங்குளமான சாதவாசகநல்லூ [ற் தேவன்] பரசிராமனான பாண்டிய தேவ .....

நாட்டு இராசவல்லி புரத்து ஒரு வாறுணர்ந்தான் எனக்கு [நல்ல பெருமாளான]

3. தமிழ்ப் பல்லவரையன் பேரால் இச் சாதவாசக நல்லூர் பரண்ணங் காற்றீசுவர முடையார் கீழைத் திரு வாசலுக்குத் தென்கிழக்காகச் செய்வித்த எனக்கு நல்ல [பெருமாள்]....

4. த்திக்குந் திருவாரூர் கூ_ஷகோளகி மடத்து ஆசாரியர் ஶிஷ்ரில் ஈசான தேவற்கும் இவர் சஹானத்து தபஸ்ற்கும் ஹோஜனம் உள்ளிட்டு வேண்டுவனவுக்கு யகவதினெதி....

5.யும் அந்தராயமும் வினியோகமும் கற்பூரவிலையும் காரிய வாராட்சியும் வெட்டிப் பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்கிரகப் பெறும் திருவாசற் பேறும் திருவிலைச் சினைப் பேறும் பொன் [வரியும்]........

6. ப்பட்டனவும் உட்பட மடப்புற யிறையிலியிருப்பதாகவும் பாண்டிய தேவனுக்குச் சாதவாசக நல்லூர் மேல்பால் கருங்குளத்தில் காணியான மூன்றாங் கண்ணாற்று நாச்சான் வயக்கா[ல்]......

7. ன் கிழக்குத் தடி கரு சூ ஊகூரு -ஙc இதன் வடக்குத்தடிசரு஀- கெூ ஆறாங் கண்ணாற்றுத் தடி கூரு஀- ஊம் சிங்கள வயக்கல்தடி சூஙளுஎசூம் ஆக இவ்வூர் வடபால் ஆ தியூர். . . . .

8. றுத் தேவன் வயக்கால் தடி கருபபதளசூம் மூன்றாங்கண்ணாற்று யாதவராயன் செய்க்கு

வடகிழக்குத்தடி உரு஀பநஊம்இதன்தென் மேற்கு தடி உரு஀஀ பத஀ ச இதன்வடகீழ். . . . . .

9.. .. .. . . . வாக்காலுக்குத் தெற்குத்தடி கரு - கூபளுகூம் [ஆக ரு]........ம் இவ்வூர் மேல்பால் புதுக்குளத்து முதற்கண்ணாற்று ஆனையாண்டான் தடிக்குத் தென்கிழக்குக் கரு. . . . . .

10. க்குக் கிழக்குச் செம்மோடி (வாய்க்) காலுக்குத் மேற்குத்தடி பலரு சூ ஊகூம் ஆக ரு இக்கற்கயத்துப் பற்றில் ஆற்றுக்குத் தெற்கு தோட்டம் ரு உபம் ஆக ரு இஉப நிலம் ˙அரையே இரண்டு...........

11. ல் மடப்புற யிறையிலியா யிறுப்பதாகவும் இறுக்குமிடத்து அந்தராயமும் வினியோகமுங் கற்பூரவிலையும் காரிய வாராட்சியும் வெட்டிப்பாட்டமும் பஞ்சு பீலி சந்து விக்கிரகப் பேறும் திரு

(விளையாட்டமும்) இலாஞ்சி

12. னைப் பேறும் பொன்வரியும் [மற்று] ம் எப்பேற்பட்டனவும் உட்பட மாத்தால் காசு.... வும் பயிர் பார்த்து விளைந்த நிலத்துக்கு கடமை மாத்தால் .... இவ்வூற் கடமை இறுக்குங் காலால் ஈக....

